CHRISTIAN LYRICS

PART I

by

G. DEVANESAN,

TAMIL PANDIT, FINDLAY COLLEGE.

MANNARGUDI.

Printed
at the
BHARATI PRESS, MANNARGUDI.

1933

Q6:417
N33
77058.

கிறிஸ்துவுக்கே மகிமை.

கிறிஸ்தவக் கீர்த்தனம்.

முதற்பாகம்.

(மதுரைத் தமிழ்ச்சங்கப்) பண்டிதன்,
(நெல்லைத் தமிழ்ச்சங்கப்) புலவன்,
(சென்னைப் பல்கலைக்கழக) வித்துவான்,
ஞா. தேவநேயப்பாவாணன்
இயற்றியது.

பாரதி அச்சுக்கூடம், மன்னார்குடி.

பதிப்புரிமை]

[விலை அணு 6.

முகவுரை.

ஆதியிற்கடவுள் உலகனைத்தையும் படைத்த நோக்கம் ஆன்மாக்களெல்லாம் தம்மைத்துதித்து மகிமைப்படுத்த வேண்டு மென்பதே. வானகத்தில் தேவதூதர்கள் ஓயாமல் தேவனைப் புகழ்ந்து போற்றுகின்றனர். அதுபோல வையகத்திலும் அவரைப் புகழ்ந்து போற்றவேண்டும். ஏனென்றால் மகிமையும் புகழும் அவருக்கே உரியவை. இதையே கர்த்தருடைய ஜெபத்தின் முதல் வாக்கியமும் இறுதி வாக்கியமும் வற்புறுத்தும்.

தேவனைப் புகழ்ந்து போற்றுவதற்குச் செய்யுளுங் கீர்த்தனமுஞ் சிறந்த கருவிகள். இவை இரண்டிற்கும் பொதுவாயிருப்பன சொல், பொருள், இசையென மூன்று. இவற்றுள் சொல்லைவிடப் பொருளும் இசையும் சிறந்தவை. அப்பொருளிசையுள்ளும், பொருள் புலவரையும் பக்தரையு மட்டும் உருக்கும்; இசையோ செவிப்புலனுள்ள இருதிணையுயிர்களெல்லாவற்றையு முருக்கும். இம்மூன்றும் சிறந்திருப்பின் இணையற்ற இன்பமும் பத்திச்சுவையு முண்டாகும். இறைவனோடு இரண்டறக் கலந்து அவரை இன்னிசையாய்ப் பாடித் துதிப்பதையே பேரின்பமென்றும், வீடென்றும் பெரியோர் கூறுவர். இத்தகைய பேரின்பத்தை இறைவனடியார்கள் இவ்வுலகத்திலேயே ஜீவன் முத்தரா யனுபவிக்கின்றனர். இறைவனையடைந்து பெறும் பாவ விடுதலையே வீடெனப்படுவது. இதையறியாத உலக நேசரோ வீடென்பது மறுமையிலோர் தனியிடமே யெனக்கருதி மேன்மேலும் அந்தகாரத்தில் மூழ்காநிற்பர். இறைவனில்லாத காலமும் இடமும் யாண்டுமின்மையால், உண்மையடியார்கள் மலை போன்ற துன்பம் வரினும் மரண இருளின் பள்ளத்தாக்கிலிருப்பினும் பொல்லாப்புக் கஞ்சுவதில்லை. பவுலுஞ் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து தேவனைப்பாடித் துதித்தார்களே!

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வோர் இசையிருப்பதால், அடியார்கள் ஆங்காங்கு வெவ்வேறு மொழியில் வெவ்வேறிசையாய்ப் பாடித்தேவனைத் துதித்திருக்கின்றனர். கிறிஸ்துமார்க்க ஒளி தமிழ்நாட்டிற்கு மேனாட்டாராற் கொண்டுவரப்பட்டமை

யால், மேனாட்டிசையே இன்றும் தமிழ்க்கோயில்களிற் பெரும் பான்மை பாடப்பட்டு வருகின்றது.

உலக முழுமையினும் தமிழரே இசையிற் சிறந்தவரென் பது, ஆராய்ச்சியால் நாட்டப்பட்ட உண்மையாகும். தமிழ் தவிர வேறெந்த மொழியினும் இசையானது மொழியுறுப்பா யமைந்திலது. மேனாட்டார்க்கு மெட்டுகள் மட்டுமுண்டு. கீழ் நாட்டார்க்கோ அவற்றொடு எண்ணிறந்தமெட்டுகளை யுள்ளடக் கும் இராகங்களு முண்டு. இவற்றின் விரிவை யெல்லாம் தமிழிசை கரைகண்ட தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் கருணாமிர்த சாகரத்துட் கண்டுகொள்க.

இசையானது இன்பம் பெருகப்பெருகக் கமகங்களும், சங்கதிகளும், ஆலாபனையும், தாளவொழுங்கும் அதிகரிக்கப் பெற்றுப் பலருஞ் சேர்ந்து பாடவொண்ணாத தாகின்றது. தாழ்ந்த மெட்டுகளானாற் பலர் சேர்ந்து பாடவொண்ணும். உயர்ந்த மெட்டுகளாயின் ஒருவரே பாடமுடியும். மேனாடுகளில் எல்லாரும் பாட விரும்புவர். அதனால் மக்களின் நால்வகைக் குரல்களுக்கு மேற்றபடி நால்வேறு சுருதிகளை வைத்துக் கொண்டு ஒருங்கே பலரும் பாடுவதற்கான தாழ்ந்த மெட்டுகளை யமைத்திருக்கின்றனர். கீழ்நாட்டிலோ இனிய குரலில்லா விடிற் பாட விரும்பார். அதோடு உயர்ந்த இசைகளையே கேட்க அவர்க்கு விருப்பம். தாமாகக் கர்ண கடூரமாய்ப் பாடு வதிலும், செவிக்கின்பமாகப் பிறர் பாடுவதிலேயே அவர்க்கு ஆனந்தமும் பத்திச்சுவையு முண்டாகின்றன. இதனாற்றான் இனிய வாத்தியங்களையும் பஜனைக்குழாங்களையும் இந்துக் கோயில்களில் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆகவே மேனாட் டார்க்கு இசைவு (Harmony)ம் கீழ்நாட்டார்க்கு இனிமை (Melody)ம் பிரதானமென்பது புலனாகின்றது.

தமிழ்நாட்டிசையின் தன்மையைச் சற்றுமுணராத சில தாந்தோன்றிகள் தமிழ்ப்பாட்டு சபைக்குதவாதென்று பழித்து வருகின்றனர். இது கொடிமுந்திரி எட்டாத குள்ளநரி கூற் றுக்கே யொப்பாகும். மேனாட்டிசையிலும் சபைக்குதவாத

சில தனிப்பாட்டுக் (Solo) களும், சொதைவண்ணங் (Band tune) களுமுள்ளவே! கீழ்நாட்டிசையிலும் சபைக்கேற்ற தாழ்ந்த மெட்டுகளைத் தெரிந்துகொள்ளவும் அமைத்துக்கொள் ளவும் இயலுமே! எத்துணையோ ஞானக் கீர்த்தனைகள் ஞானப் பாட்டுகளைப் போலவே பெரிய சபையாராலும் இசைவோடு பாடப்படுவதில்லையோ? மேலும் ஞானப்பாட்டுகளை விடுதிப் பள்ளிக்கூடங் (Boarding School) களிலும், கோயில்களிலும் தக்க அறிஞரை வைத்துப் பயிற்றுவிக்கின்றனர். கீர்த்தனை களையோ கிளப்பாருமில்லை, கேட்பாருமில்லை. இதையெல்லா மறிந்திருந்தும் தமிழிசையைக் கோயிலதிகாரிகள் இன்னும் கோயிற்குப் புறம்பாக்கி வைத்திருப்பது பலர்க்கு ஆராதனை யின்பங் குறைதற் கேதுவாகின்றது. தமிழறியாது அங்கிலமே பயின்றவர்க்கு மேனாட்டிசை இன்பந்தரும். ஆனால் அங்கில மறியினும் அறியாவிடினும் தமிழ் பயின்றவர்க்கோ அது சற் றும் இன்பந்தருவதின்று. இதற்கு இந்துக்களே சிறந்த எடுத் துக்காட்டாவர்.

தமிழிசைபற்றிய ஞானக்கீர்த்தனைகள் ஏராளமாயிருப் பினும் அவற்றுட் பெரும்பாலன எளிய கருநாடக மெட்டுகளா தலின், அவை உயர்ந்த இசையை விரும்பும் தமிழ்க் கிறிஸ்தவர் கட்கு எத்துணையும் போதியவாகா. இக்குறையை நிறைத்தற்கு இதுபோது எத்துணையோ கீர்த்தனப் புத்தகங்களும் வெளி வந்துள்ளன. ஆயினும் பலரும் பாடுவது தேவனுக்கு மகிமை யென்று கருதிக் கிறிஸ்துவின் ஜீவியத்தைக் கோவைபடப் பாடி இக்கீர்த்தனங்களை வெளியிடத் துணிந்தேன். இவற்றுட் பலர்க்கும் பயன்படுமாறு தேவாரம், திருப்புகழ், தியாகராஜக் கீர்த்தனை காவடிச்சிந்து முதலிய பலதர மெட்டுகளும் அடங்கி யுள்ளன.

இப்புத்தகத்தின் இறுதியிலுள்ள சில சங்கீதங்கள் சில் லாண்டுகட்கு முன், தின்னனூரிற் சிறிதுபோது திகழ்ந்த பாரதகிறிஸ்தவவர்த்தமானிப் பத்திரிகை விளம்பரத்திற்கேற்பப் பண்ணமைக்கப்பெற்றவை. ஏனையவற்றுட் சில சென்னைத் தண்டையார் பேட்டை U. F. C. M. சபையார் வேண்டுகோட்

கும், சில மன்னார்குடிப் பின்றிலேக் கல்லூரித் துணைத்தலைவர் கனம் பொன்னையா அவர்கள் விருப்பத்திற்கும், சில மன்னார்குடி இம்மானுவேல் இசைக்குழாத்தின் குறைபாட்டிற்கும் இணங்கியவை.

இப்புத்தக சம்பந்தமாய் மன்னார்குடி மிஷன் டாக்றர் கனம் எலையாஸ் ஐயரவர்களும், மன்னார்குடிச் சபைத் தலைவர் கனம் சிமித் ஐயரவர்களும் செய்த வுதவிகள் மிகவும் பாராட்டற்பாலன.

இப்புத்தக முடிவுகாறும் தோன்றாத்துணையாய் உடனிருந்துதவிய எம்பெருமான் ஏசுவின் திருவடிகள் என்றும் என் தலைக்கு அணியாவன.

மன்னார்குடி
21-2-1933

ஞா. தே. பா.

இசையாசிரிய வாழ்த்து.

நிலைமண்டில வாசிரியப்பா

பொன்னார் வெண்ணெற் பூந்துறை மருத
மன்னார்குடியில் மாண்புற வோங்கத்
தெள்ளிய தலைமைத் தேசிய வுயர்தரக்
கல்லக முதற்பாற் கவின்பெற விளங்கும்
பேரா சிரியன் பேராவுரையன்
திங்கட்டன்மைத் திவவுறுகேள்விச்
செங்கோட்டியாழிற் செயிர்தீர் புலவன்
மாரி யென்ன மாறொன்று கருதாச்
சீரிய வின்னிசை செவ்விதிற் சொல்வோன்
இராஜ கோபாலையன் இசைநிறீ இக்
கன்னலுங் கைப்பக் கல்லுங்கரைய
மன்னுக பாமணி மணலினும் பலவே.

கிறிஸ்தவக் கீர்த்தனம்

முதற் புத்தகம்

காப்பு

கலி விருத்தம்

பூவினிற் போகமே புந்திபொருந்திடும்
ஆவன மாந்தருக்கன்று வரைந்தன
பாவினை யின்றியும் பண்டிதருள்ளரால்
தேவனைப் பாடவுந் திருவருள்வேண்டுமே

கடவுட்பரவல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிதா

மன்னுயி ரொன்றுங் கெட்டு மாண்டுபோ காம லென்றும்
மன்னுயி ரடைய வேக மகனைமுன் னளித்துப் பாரில்
இன்னதா யன்பு கூர்ந்தா ரெனிற் றிருப் பரம தந்தை
என்னதென் றுரைப்பேன் ஈசன் எனக்கருள்செய்தவாறே
மன்னுயிர்=1. மனிதாத்துமா 2. நித்தியஜீவன்.

குமாரன்

பாவியைமீட்க வின்பப்பரத்தைவிட் டிறங்கிப் பாவம்
பூவிலோ ரேழையாகிப் பொறையொடு திரிந்துசுற்றி
நாவினாலுரைக்க வொண்ணா நடுக்குறும் பாடுபட் டே
ஆவியுமளித்த ஏசுவடியிணை முடிமேற் கொள்வாம்.

பரிசுத்தாவி

எண்ணருமாதி நீர் மேலியங்கியே ஏசுதேவ
புண்ணியன் தலைமேலன்று புறவமாயிறங்கிச் சீடர்
கண்ணிய பெந்தேக் கோஸ்திற் கனற்பெருங்காற்றுவீசி
மண்ணியல் மொழிகள்பேச மருவுதூயாவி போற்றி.
புறவம்=புறா.

மூத்தேவர்

நித்திய ஜீவனை முன்நிமலனுந்தந்தை தந்தார்
குற்றவுண்மாந்தி மாந்தன் குற்றுயிரானுன் ஏசு
நற்றவன் தசையிரத்தம் நன்மருந்துணவாய் நல்கச்
சுத்தமாவாவியாரும் சுகம்பெற வீசினுரே.

திரியேக தேவன்

எங்கணும்நிறைந்த செல்வத் திறைவனிலொரு கூறன்றே
கொங்கலர் நறுந்தண்டாராய் குமரனென்றுரைக்குந் தெய்வம்
அங்கவரிருவர்கொண்ட ஆவியே பரிசுத்தாவி
தங்குமோ ஆவியின்றித்தம்பிரான் வினையுமுண்டோ.

அவையடக்கம்

பாட்டுடைத் தலைவனந்தப் பரமனே யவனேர்காலும்
கேட்டினையடையாளுகக் கிளப்பதென் பொருத்தமின்மை
காட்டியல் வழுக்களைந்தும் நம்பனேர் பொருளாக்கொள்ளான்
காட்டுறப் பிழைகடோன்ருக் கல்வி நூலுலகத்துண்டோ.

உலகநேசர்க்குரைப்பது.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கவலைமிகு முலகியலோர் கனவாகி யுடம்புவிழும்
கண்ணுவதேன் செல்வ போகம்

அவநிகழு மாசைவழிச் சென்றுதிரு வடைந்தாரும்
ஆசையென எல்லைகாணுர்

பவநெறிசே ரெரிவிலகிப் பண்ணவனுங் கிறிஸ்தேசு
பாதார விந்தஞ் சேர்தி

அவனி முழுதுண்டயானும் ஆன்மாவை யிழந்துறூஉம்
ஆதாயம் யாதுமாதோ.

ஆசை=1. விருப்பம் 2. திசை

திக்கற்ற பாவிக்குத் தேரிப்பது

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாங்கரும் பொருளும் மற்றுப் படிவமு மில்லை யென்றே
ஏங்கியிங் கிருக்கும் பாவி யெழுமனக் கிளர்ச்சி யோடே
நீங்குமோர் பாவி மீளின் நின்மலன் தூத ரெல்லாம்
தாங்கரும் பேரா னந்தத் தாண்டவ மாடி நின்றூர்.

புறமதத்தார்க்குப்புகல்வது

வானத்தின் கீழே யெங்கும் வணங்குதற் குரிய தெய்வத்
தானத்தில் ஏசுவல்லால் தழுவுறப் பிறிதொன் றுண்டோ
மேனித்த வீடு சேர மிகுபல நெறிக ளில்லை
நானத்த முயிர்மெய் யென்றூர் நம்பனு ருலக த்தீரே
அத்தம்=வழி உயிர்=ஜீவன் மெய்=சத்தியம்.

குமரற் பரவல்

கோச்சக ஒரு போது

1 பாவிகளை மீட்டருளப் பாரேழை யாகிச்
சேவடியுஞ் சிவந்துலையச் சேணடந்து நாளும்
ஓவறவூ ழியஞ்செய்த உன்னதனும் ஏசு
தேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திறமிருந்துங் கேளாதார் செவியென்ன செவியே.

2 சிரந்தானுஞ் சாய்க்கவிடஞ் சிறிதுமின்றி யெங்குங்
கரந்தாள்மெய் கண்ணுயிர்வாய் கருதியவர்க் கீந்து
பரந்தேதன் பகைவர்வரப் பருவம்வரு முன்னே
கரந்தானைக் காணுத கண்ணென்ன கண்ணே
கண்விழித்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

3 மடந்திரப் பலவுரைத்து மாநிலத்திற் சுற்றிப்
படர்ந்தாடும் படவரவு பாதாளஞ் சாவு
கடந்தானைப் பன்னிருவர் கண்டஞ்ச நீர்மேல்
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நசரேய நமவென்னு நாவென்ன நாவே.

4 விண்ணொளியும் விரிநீரும் விரைந்தபெருங் காற்றும்
மண்ணுயிரு மிருடீர மலருமிரு சுடரும்
தண்ணளியுந் தானாகித் தனிநின்ற நிலையைக்
கண்ணியதுங் குவியாத கையென்ன கையே
கைவீசிச் செல்வார்தங் கையென்ன கையே.

5 பண்ணியமைந் தால்வனத்திற் பகருமையா யிரவர்
உண்ணிய நல்விருந்தளித்த உம்பர்பெருங் கோனை
நண்ணியெனை மீட்டருளும் நாதனைநள் ளிரவும்
எண்ணியெண்ணி யுருகாத நெஞ்சென்ன நெஞ்சே
இடம்பரந்து வல்லென்ற நெஞ்சென்ன நெஞ்சே.

அன்புறுபதிகம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பண்—திருநேரிசை

1 கொரி. 13

வெண்கல தாளம்போல விண்ணில மொழிகள்பேசி
முன்புகல் தரிசி யாகி முழுமறை யறிவுற் றாலும்
மன்பெரு மலையைப் பேர்க்கும் மால்விசு வாசியேனும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

நன்பொருள் யாவு மீந்து நல்கினு முடம்பு தீக்குத்
தன்புகழ் கூறா தென்றும் தயவொடு சாந்த மேவி
புன்செருக் கழுக்கா றின்றிப் புரிவினைத் தூய்மை கொள்ளும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே

தன்பதம் சினமே தீங்கு தழுவிடா தநியா யத்தில்
இன்புற வின்றி மெய்யில் எழிலுற மகிழ்ந்தியாவும்
நம்பியே பொறுக்கும் தாங்கும் நலமுடன் விசுவாசிக்கும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே

மன்பல பாஷை தீர்க்க தரிசன மறிவு மாயும்
புன்றலைக் குழவிக் கேற்ற புருஷனா யொழித்து விட்டேன்
நம்புதல் விசுவா சத்தில் நனிபெரி தாக மன்னும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே

யாக். 2

அன்பறு விசுவாசம்மே யமையுமென் றிருத்தல் வேண்டாம்
பண்பறு பேயும் நன்றே பரமனை விசுவாசிக்கும்
பின்புகல் வினையில் லாமற் பிழைக்குமோ விசுவா சந்தான்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

குறள்

நண்பெனுஞ் சிறப்புக் கொண்ட நவையறு மார்வ மாந்தர்
புன்கணீர் பூசல் செய்யப் புதவுடை வெள்ளமாகி
என்புயிர் பொருள்களெல்லாம் எனையோர்க் குரிமைசெய்யும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

போது

பண்பெறு மழலை மக்கள் பயிலரு மசுத்த ரேனும்
அன்புடை யிருபெற் றோரும் அருகணைத் துவகை பூப்பர்
மன்பெருங் குறைகளெல்லாம் மறைத்துறு பாவம் போக்கும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன்றில்லை காணே.

நண்பறத் தூய ரேனும் நளிகடற் காதற் றேவன்
எண்பதத் தேழையாகி இழிகுலத் தவரோ டுண்டு
புண்படப் பாடுபட்டுப் பொன்றினர் துளியதேனும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன்றில்லை காணே.

துன்புறு தவத்தின் யோகத் துறவறந் துவரப் பூண்டு
வன்புறு யாக்கை பெற்று வாசியில் வாழ்ந்து நீடி
எண்பெருஞ் சித்தி பெற்றே எழிலுறு நிலை நின்றாலும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன்றில்லை காணே.

பண்புற மறைப யின்று பலபெரும் பட்டம் பெற்றும்
இன்புறப் பிரசங்கித்தும் இலகுரை விளக்கங்கூறி
நம்புறப் புதுமை செய்து நாருறும் போய்வி டுத்தும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

1

குமரவணக்கம்.

கானடா—ஆதி.

(இம்மெட்டொன்றும் என் உடனுசிரியர் A. V. சீநிவாசையர் அவர்கள் தெரிவித்தது)

தேவகுமார! உன் திருவடி சரணம்
தீனதயாளம் உன் திவ்வியாபரணம்
தீரென தாவரணம்.

பூமனுவாகிய புண்ணிய! சரணம்
பூரண நீதியிற் பொலிந்தனை கிரணம்
போற்றினேன் உன் சரணம்.

தேசமெங்கும் நலம் செய்தவா! சரணம்
தீயரை மீட்கவே தெரிந்தனை மரணம்
தேகமுற்றாய் விரணம்.

பாவியை மீட்டருள் பரமனே! சரணம்
பக்தருக்குன் பதம் பயமறும் அரணம்
பதிந்தருள் என் கரணம்.

வானவர் போற்றிடும் வலவனே! சரணம்
வருந்தியெற்காகவே பரிந்தனை சரணம்
வந்தருளாய் தருணம்.

ஆவரணம் = ஆணவம். சரணம் = 1. நமஸ்காரம் 2. பாதம் 3. அடைக்கலம். விரணம் = காயம் அரணம் = கோட்டை கரணம் = அந்தக்கரணம்.

2

'நாதவிந்துகலாதீ' என்ற மெட்டு.

ஆரணம்புகழ் ஆதீ நமோ நம
ஆத மின்புறு நீதீ நமோ நம
ஞான சுந்தர ஜோதீ நமோ நம நாரணி

நாரணம் புரி தூயாவி மீதுற
(ஸ்)நானகன் கர ஞானபிஷேகமு
னுகந்துபிதா வோடு மேவிய நசரேயா
வாரணங்கலி லேயாவு மாருத
வேகமுந்தணி வீரன வாசக
மாவகுக்துமெ யாவீநிவாரண மறியாகி
மாரணம் படு பாதாள மாசுணம்
மாய வென்றெழு மாராய! பேய் முதல்
மாள என்றனை ஆளாய் மனோகர மணவாளா

3

கிறிஸ்துவின் பிறப்பு.

தீர்க்கதரிசனம். மீகா 5:2. ஏசாயா 7:4.

'ஜோர் ஜோர் ஜோர்' என்ற மெட்டு.

1 யூதேயா தேச முற்ற யோக முள்ள பெத்தலேம்
யூதாவின் மாகுலத்தில் ஏது நின்போல் இத்தலம்.
2 இஸரவேலை யாளும் பிரபும் எழுந்தருளும் உன்மிகை.
இதோ ஒரு மகவுயிர்க்கு மென்னும் எளிய கோலக்
கன்னிகை.
3 இம்மானு வேலனென்றே இவருக்கிடுவர் இயற்பெயர்
நம்மோடு தேவனென்னும் நலமிகும் பொருள் அதற்
குயிர்.

4

காபிரியேல் மரியாளை வாழ்த்தல்.

லூக் 1: 28—33.

'பழனிமாமலை வாழும்' என்ற மெட்டு.

இராகம் காப்பி தாளம்—ஏகம்.

1 கிருபை பெற்ற மரியே கிளர்ந்துநீ வாழ
பரமன் நித்த முனக்குப் பலந்தரு தோழன்
2 அரிவையருக்குள் நீயே அடைந்தனை ஆசி
அஞ்சாதே தேவதிரு அருட்சக்வாசி

3 கருப்பவதியாயொரு கலைஞனைப் பெறுவாய்
பெருக்கமுடன் ஏசென்னும் பேரது தருவாய்.

4 மாபரமனுக்கவர் மகனெனப் படுவார்
தாவீதின் அரியணை தனயனுடையவார்.

5 இஸரவேல் குடும்பத்தை என்றென்றும் ஆளும்
இறுதியவ் வரசிற்கே இலையொருநாளும்.

5

கிறிஸ்துவின் பிறப்பு.

இராகம்—பியாக் தாளம்—ஆதி.

பல்லவி

இத்தரையின் மத்தியினில் பெத்தலையில் சத்திரம்

அனுபல்லவி

அத்தனேக புத்திரன் கிறிஸ்துவு முதித்தனர்

சரணம்

1 கர்த்தரின் தூதன் நற்செய்திப் போதம்
செய்த்தலை சென்று சொல்ல மைத்தவர் கண்டுகொள்ள (இ)

2 உன்னதம் மானம் மண்சமா தானம்
மன்பதை மேற்பிரியம் மன்னற்காக விண்பாட (இ)

3 மீனுறக் கீழார் வான நன்னூலார்
மின்னொளிர் பொன்னே தூபம் வெள்ளைப்போளமிறுக்க (இ)

மீன் = நட்சத்திரம்.

6

ஏசுவின் ஏழைக்கோலம்.

'வேடலனு கோதண்டபாணி' என்ற மெட்டு.

தோடி நுபகம்.

பல்லவி

ஏசையா இதென்ன கோலம்
ஏழையோ நீ இந்த்ரஜாலம்

அனுபல்லவி

மேசையா மீன் மிளிர ஞாலம்
மேலே வானுனே மீச்சொல்காலும் (எ)

சரணம்

காசினி தீ குளிருங் காலம்
கன்னியேழை மரியாள் மூலம்
காலி சேரயற் சாவடித் தோழம்
கண்டதில்லை இடம் விசாலம்.

தூசு பழங் கந்தை மேலும்
துய்ய பஞ்சணை புல்லே கீழும்
தொழுவர் முனமுன் தூதராலும்
தோற்றமறிந்தார் துங்கர் போலும். (எ)

தொழுவர் = இடையர்

7

எட்டாம் நாள் விருத்தசேதனம்.

சிமியோன் துதி.

'அநாதுடனுகானு' என்ற மெட்டு.

பல்லவி

என்னே! எனது பாக்யம் — இம்மையே

அனுபல்லவி

முன்னோன் மகன்வரு முன்னிறப்ப தில்லென
முன்னே யுரைகாணவின் றேசுவை (எ)

சரணம்

கோனே! உம்மடியேனை நற்சமாதானமாய் விடுகின்றீர்
எனோருக்கொளியாய் இனத்தில் மகிமையாய்
எல்லாருக்குமுன் ஆன ரட்சண்யமுற (எ)

8

தேவதூதன் யோசேப்புக்குச் சொல்வது.

'ரதுநாயகா' என்ற மெட்டு

பல்லவி

எடுசேயனையோ சேப் உடனே எரோது கொல்ல
வகை தேடுவான்

அனுபல்லவி

கொடுபோ எகிப்து தாயொடேபின் நான்
கூறுமட்டும் ஆங்கே குடிகூட.வே. (எ)

சரணம்

(ஏரோது இறந்தபின் தேவதூதன் சொல்வது)

நெடுநாளாகின சேயைக் கொல்லவே நினைத்தார்
இறந்தார் எழுந்தேக இனி
விடுக யூதேயா ஏரோதின் மகன் வேந்தனுனதினல்
நாசரேத்தில் வாழ். (எ)

9

ஏசுவின் இளமை.

'தீனமணி வம்ச' என்ற மெட்டு.

பல்லவி

இளமையில் ஏசு இலகவே பெற்றோர் ஏவலில் நின்றார்

அனுபல்லவி

எளியரொனுத தம் இறைமையுமெணுத
குலவினை செய்தொரு குற்றமுளாத (இ)

சரணம்

பெற்றவர் தகைமையைப் பிறர்வியந் தேத்த
பெருந்தகை பேணி பெரியவர்ப்பணிந்து
நித்தனருள் ஞானம் நிலத்தவர் தயவினும்
நிறைமதி நீர்மை நீட வளர்ந்தனர். (இ)

10

ஞானஸ்நானம்.

'சங்கற்பமே என்ற' மெட்டு.

பல்லவி

யோர்தான் நதி யோவன்னன் சம்மதி
யூதகுல பதியபிஷேகாவதி

அனுபல்லவி

பாரில் தேவ வதி பண்படு உந்திதி
பரம்புக மனந்திரும்புவார் கதி (யோ)

சரணம்

வானிறப் புறவின் வடிவாய்த் தூயாவி
வந்திறங்கித் தேவ மைந்தன் மேற்குலாவி
வானகப்பிதாவும் வாசக மொன்றேவி
வணங்குந் திரியேக திறம் மேவியே (யோ)

வதி = வழி.

11

ஏசு சாத்தானல் சோதிக்கப்பட்டது.

'ப்ரோவ சமைய' என்ற மெட்டு.

பல்லவி

வனமேவாசம் வானப்ரதேசம்

அனுபல்லவி

அணவுந் தேவேசும் ஆவியுபதேசம்
உணரும் ப்ரகாசம் ஊழியப்ரவேசம் (வ)

சரணம்

உண்பதில் நாற்பானுள் உபவாச மேனுள்
உலகத்தே வானன் உன்னதன்பாற் போனன்
தின்பொருளிலிச்சை தேவனைப் பரிட்சை
தீயபேயருச்சை தேறி யேசுரட்சை (வ)

12

கானவூர்க் கலியாணம்.

'தாதாபாய் நவரோஜி' என்ற மெட்டு.

பல்லவி

கானவூர்க் கலியாணம்
கம்பீராதன சம்பாசோதனக் (கா)

சரணம்

கானது கந்த ரசம்
ஆனவிருந்து நிசம்
ஆண்டவா அகம் ஈது குறையென
வேண்டினர் மிக ஏசு பரமனை (க)

தொகையரு

ஆறுசாடிகளின் நீரை அருமை ரசமாகச் செய்த
அற்புதமா மகிமைத் தேவன்
நீறு மூடுந் தழல்போல நிமலனும் அவதாரன்
நித்திய மாவழி மெய்ச்சீவன்

சரணத் தொடர்

ஏதேனில் ஆதி மணம்
எவாளோ டாதம் முனம்
ஈசனே குரு தந்தையும் மாமனும்
ஏசுவே திரு இந்தமகா மணம் (கா)

13

மலைப் பிரசங்கம்.

ஜெபிக்கும் முறை.

'வாழலோ சகிப்ரோ' என்ற மெட்டு.

கீரவாணி — ரூபகம்

பல்லவி

ஜெயம்பெறச் செயவே ஜெபமே
ஜெகமேயலகை தீர

அனுபல்லவி

புயபல தானியல் மனமே
புவனமன்னும் போகும் பின்னே (ஜெ)

சரணம்

அதிகவாச கார்த்தமே அறையா திருமின் அவையிலென்றும்
அகவுறையாண்ட வ்ரறிவார் அரியது திகளே யமையும்
இதர சிந்தனை விண்டறவே ஏகி நீட அந்தரங்கம்
இறையைத் தரையிற் கும்பிட்டேத்தி
இளகி யன்பு மல்கி நின்றே (ஜெ)

14

பரமண்டல ஜெபம்.

'பொன்னூர் மேனியனே என்ற மெட்டு'

1 விண்ணூர் மண்டலத்தில் – மிக – வீற்றிருக்கும் எந்தையே
பண்ணூர் உந்தன் நாமம் – பரிசுத்தப்படுவதாக
கண்ணூர் உம்மரசு – கடி – தாய் வருகவானில் உம்
எண்ணே யாவதுபோல் – ஆக – இப்புவிமே லென்றுமே.

2 அன்றே ஊணிடும் யாம் – எமக் – காகார் குற்றம் பொறுக்கும்
நன்றே போலெமக்கும் – அருள் – நாதனே குற்றம்பொறும்
தொன்றூர் சோதனையும் – வருந் – துன்பமும் தீர்த்தருளும்
மன்றே உம்முடைமை – ராஜ்யம் – வல்லமை மாட்சி.
ஆமென்.

15

கவலைப்படாமை.

'கலிலோ' என்ற மெட்டு

பல்லவி

மனமே நீ கவலையுறுவதினுல் மருவின தென பெருமை
முழ ஒருமை

அனுபல்லவி

தினமே தன் வினை செய்வதருமை
தெரிவதோ தினமறுமை — வெகு சிறுமை (ம)

சரணம்

எனவோ நாம் உண்பது முடுப்பது மென்பதே யுனக்கேனே
முனமாவி மெய்யுடனளித்தவன் முன்னவை மறுப்பானே
வனமேவு பறவை தாவரமே வாழ்வன உயர்தரமே
தேவகரமே (ம)

16

நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்கினது.

'சுஜனஜீவனு' என்ற மெட்டு.

பல்லவி

பரமநாதனே திருப்பதும பாதனே ஏசு

அனுபல்லவி

தருமபோதனே பெருந் தவவிநோதனே
அவ தாரநீ யென்னில் சேரநான் ஒரு
தகவில்லாதவன் எதும் (ப)

சரணம்

கோரமென்றன் வேலையாள் திமிர் வாத வேதனை
கூறு மீண்டோர் வார்த்தை வினைஞன் குணமே பூரணம்
வேறும் வேண்டுமோ என்றன் வீரர் நூறுபேர்
எந்த வேளையும் வந்து போவரே பிறர்
வியஞ்செய்வேனுமே எவப் (ப)

இல் = வீடு.

17

விதைக்கிறவன் உவமை.

நொண்டிச்சிந்து.

கேளீர் உவமையொன்று— முடியக்
கிளக்கும் வரையும் உள்ளக் கிளர்ச்சியுடன்
விதைக்கும்படி யுழவன்—ஒருவன்
விதைகளெடுத்துக்கொண்டு விரைந்து சென்றான்
விதைக்கும் பொழுதுசில—விதைகள்
விழுந்தன புறமான வழியருகே
பறவை பலவந்தே—அவற்றைப்
பட்சித்தன முழுவதும் நட்டமாகவே
கற்பாறை நிலத்து—விதைகள்
கடிதில் முளைத்தன மண்காணுமல்
வெயிலேறின போதோ—அவைகள்
வெந்து கருகினவே வேரின்றி
முள்ளாரிடம் விழுந்த—விதையும்
முளைக்கமுள் வளர்ந்ததை நெருக்கினதே
பண்ணார் நன்னிலத்து—விதைகள்
பத்தும் நூறுமாகப் பெரும் பலன் தந்தன
விதைப்போன் மனுஷமகன்—அந்த
விதைகளும் விண்ணரசின் வசனங்களே
நிலமோ மனிதர்மனம்—அதுவும்
நிகழ்தரும் நால்வகை நிலையறிவீர்

18

காற்றையுங் கடலையு மதட்டினது.

'மருகேலரா' என்ற மெட்டு.

ஜயந்த ஸ்ரீ ஆதி

பல்லவி

சரணாகதி சார்ந் தேம் பதீ

அனுபல்லவி

சரணாவதாரீ சருவாதிகாரீ
புயன் மோதிவாரி பொரும் ஆதரி (ச)

சரணம்

கன்னிகை குமார கண்டிறந்து பாரே
மன்னுகல மூட மலிதரங்கமையா
இன்னே மடிகின்றோம் என்னவே பன்னிருவர்
அந்நிலை கடிந்தாய் அலைமாருதம் (ச)

19

ஐந்தப்பங்கொண்டு ஐயாயிரவரைப் போஷித்தது.

'அமரநடிமாரே' என்ற மெட்டு.

பல்லவி

மனமுருகுந் தனி மாலை வணுந்தரம்

அனுபல்லவி

ஜனம் பெருகும் இனிச்சால முகாந்தரம்
தினகரனே செலத் தீவிரமாந்தரம் (ம)

சரணம்

1 மாஜனம் போகியே மருங்கு கிராமம் முன்
போஜனம் நாடவே புகன்றனர் சீடரும் (ம)
2 போக வேண்டாமவர்க்குப் புது விருந்திடு மென்றே
ஈகையாண்டவர் கூற இருமீனைந்தப்ப மென்றார் (ம)
3 ஐம்பதைம்பது பேராய் அமர்த்தியனைவரையும்
ஐந்தப்ப மிருமீனை ஐயன் ஆசீர்வதித்தார் (ம)
4 போதியவரை யுண்டு புடைக்க விலாவினூடே
மீதிய துணிக்கையும் மிகுத்த பன்னிரு கூடை (ம)
பெண்ணே பிள்ளை தவிரப் பெருவிருந்துண்டவர்கள்
எண்ணிலையாயிரவர் இருந்ததாகக் கண்டனர். (ம)

20

பிறவிக்குருடனுக்குப் பார்வையளித்தது.

'காணக்கிடையாத தங்கம்' என்ற மெட்டு.

பல்லவி

ஆனந்தப் பேருமென் அங்கம்—பர
மானந்தப் பேருமென் அங்கம்—அதை
மானுங் கரணமில்லை யெங்கும்—மதிவிளங்கும் (ஆ)

சரணம்

1 காணச் சுடர்மணியாம் காமர் முகத்தணியாம்
காட்சி நன்மாட்சி சுயாட்சி உரை சாட்சி (ஆ)

2 ஏழையென் மீதிரங்கி யிருகண்ணுந் திறந்தவர்
ஈசன் மகேசன் ப்ரகாசன் கிறிஸ்தேசன் (ஆ)

3 சேற்றைப் பூசி விடுத்தார் சீலோவாம் நீரடுத்தே
சென்றேன் கை மொண்டேன் கண் கொண்டேன்
உடனே கண்டேன் (ஆ)

4 ஒருவர்க்கு மிவ்வற்புதம் உரையாவகை எவ்விதம்
ஓங்கும் நவாங்கம் தான்யாங்கும் உரைதாங்கும் (ஆ)

21

மறுரூபமானது.

'கோலுமவரேகத' என்ற மெட்டு.

தோடி ஆதி.

பல்லவி

மகிமையேசு பர மாதங்க மேனி

அனுபல்லவி

பகலென முகவொளி பனியுறை கட்டிநிகர்
வகையவர் தேகமும் வஸ்திரமும் ஒளியான (ம)

சரணம்

1 மோசே எலியா ஏசு மூவரும் எருசலே
ஏசுமுடிவைப் பற்றிப் பேசினர் நேருமுந்திச்
சீஷர்மா பேதுரு சிறந்த யோவான் யாக்கோபு
கூ சவே பார்வை மலைக் கொடிமுடி மேலே (ம)

2 செஞ்சரண் நாதா உந்தன் சித்தமேல் முக்கூடாரம்
விஞ்சவறைவோ மென்றே வேண்டினன் பேதுருவும்
மஞ்சு மேல் நேசகு மாரனிவர் என்ற ஒலி
அஞ்சினர் சீஷர் எசும் அபயமளித்தார் (ம)

22

பவனி

'வங்கார மார்பிலணி' என்ற மெட்டு.

சந்தக்குழிப்பு.

தானன தானதன தானதன தானதன
தானன தானதன தானதன தானதன
தானன தானதன தானதன தானதனந் தனதான.

ஈராறு சீடர்களு மேசுவுன தாணையென
நேராக வேகிபெப கே யெனும வூரதனில்
நாராரு மாகழுதை யோடுமறியே கொடுவந் தவைமேலே

சீரான சீரையணிவார் பணிய மாறரிய
வீராநல் வீறுபெற வேறிவல சாரியினை
ஏராள மானகரர் சீரைவிரி பாதைபுரிந் திதமாக

வேருன பேர்பசிய சாகைவழி பாவவிரு
சாரார்கள் தாவிதுகு மாரபர நாமவரர்
ஓரோசை யானதுதி யாருனத மோசனவென் றுரைகூற

மாராய மாவெருச லேநகர வீதிகளில்
ஆராரு மாரெனவி சாரணைசெய் வார்மருள
நேராளர் மாறுநச ரேயகுரு வேசுவெனும் பெருமானே!

நீராரு வாவதியும் நேரறுத ஞருமுகம்
ஏராக வாலயம தேகியதி காரமொடு
சூரான சூரனென மாறியக வாணிகரும் புறமாக

வாரான வாரடியி னுல்வெருவி யோடிடவும்
மாருடு காசுபுற வோர்பலகை யாசனமு
மாருக ஓதுஜெப வீடுகளர் மாகுகையென் குமரோனே!

பாராத பேர் முடவ ரோடுபிணி யாளர்பலர்
சீராக நீசெய்தவ மாபுதுமை தாவிதகு
மாராய ஓசனவெ ஞேசையிடு பாலரொடுஞ் சினமாகி
கோராத பாரகர்ப்பு ரோகிதரி தேனெனவும்
நீரோது வேதமென ஓர்வசன மோதிவிரி
பாரான வாழ்விலொரு மாவயவ ரானபரம்பொருளோனே

23

தலைவி தோழிக்குச் சொல்லியது.

'வெள்ளிப்பிடி யறுவாள்' என்ற மெட்டு.

ஆரபி — ஏகம்.

மானிடருந் திரளாக மாணவக ரொடே கூடக்
கானமிளை யவர்பாடக் கல்விமானுங் காணுவாறே
பானுவொரு புயன்மேலே பாய்ந்து வரல் போலே சாலேம்
மாநகரி லொருபவனி மன்னன்வரக் கண்டேன் நானே.

வாகைபெற வயவீரர் வாளென்வே ஓலை வீசி
ஓகையுடன் இளையோரும் ஓசன்ன ஓசன்ன வென
சாகைதழை பலபேர்கள் சாலையிடச் சாலேம் நகர்
மாகழுதை மிசையேறி மன்னன் வரக்கண்டேன் நானே.

காவலரார் இவரென்று கண்டவரே கேட்டயர
தேவதிரு வாரான தேசிகன் கிறிஸ்தே சென்றார்
தாவிதகு மானகத் தங்கமேனி பொங்கவொளி
மாவலமை யொடுவீதி மன்னன்வரக் கண்டேன் நானே.

ஓலைகரம் பிடித்துயர்த்தி ஓசன்ன ஓசன்னவென்று
பாலகரும் பலமாகப் பண்ணகரம் பாடிவரச்
சேலைகிளை பாவு வழிச் சென்றனரே தேவாலயம்
மாலெனக்குள் வளர்ந்தேற மன்னன்வரக் கண்டேன் நானே

காசுபுரு வாணிகரைக் கண்டுசினங் கொண்டேயவர்
ஆசனத்தைக் கவிழ்த்தோடி ஆச்சரியமாயடித்தார்
ஓசன்ன வோசன்ன வென்றே ஓயாச் சிறுவர் பாட
மாசனத்தின் நடுவாக மன்னன் வரக் கண்டேன் நானே.

24

'பாலாபிஷேகப் பழனி' என்ற மெட்டு.

பல்லவி

தாவீது ராஜகுமார கெம்பீரரீ தந்த பவனித் தரிசனமே
கோவேறுமாகழுதை வாகனரூட கும்பிடவந்தேம் பரிசனமே

தொகையரு

தேவாதி தேவன் பெருந் திரு நாமத்தால் வரும்
மூவாத ஏசு பெறும் முரு கோலைச்சாமரம்

முடுகியல்

உடைகிளை விரித்தவ ரோசனுபாட
மிடைதர நெரித்திடு மிகுசனங் கூடச்

பல்லவி யெடுப்பு

சாலேமின் ராஜாநற் சாந்தகுணச் செல்வன்
சாரி செய்து சாலேம் மாநகர்க்கே
கோலாகலத்துடன் கூடவருவதைக்
கூறுவேம் சீயோன் குமாரத்திக்கே

தொகையரு

தேவாலயத்திற்குள் வியாபாரம் நீக்கி
நோவாருக்குச் சொஸ்தம் மேவார வாக்கி

முடுகியல்

பாலகர் ஓசனு பகரவும் வேத
பாரகர் மாசினம் மிகுதியு மோத

பல்லவி யெடுப்பு

பாலகர் வாயிற் பரமானந் தத்துதிபாரு மென்ற மெய்ப்
பராபரனே (தா)

25

அத்திமரத்தைச் சபித்தது.

தேன்மாங்கு.

1 அத்திமரத்துக் கிளி—மிக
அழகழ காய்ப் பேசுங்கிளி
தித்திக்கும் செங்கனியை—அது
தேடிப்பார்த்துங் காணவில்லை

2 அத்திமரத்தினிலே—மிக
அழகான பல இலைகள்
எத்திவஞ்சித்ததினால்—கிளி
இட்ட சாபம் பட்டது பார்

3 அத்திமரம் படவே—கிளி
அயன்மரக் கிளை யடைந்து
மெத்த மதுரமுள்ள—கனி
மிகவுண்டு களித்ததுவே

4 அத்திமரந் தளிர்க்கும்—அதை
அறிகுவீர் வசந்தகாலம்
இத்தரையின் முடிவும்—உடன்
எட்டிவரும் பைங்கிளியே

கிறிஸ்துவின் பாடுகள்.

கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதிலும் அவருடைய பாடுகளே பாவிகட்குப் பிரதானமாகும். பாடில்லாமற் பலனில்லை என்றபடி கிறிஸ்துவின் பாடுகளில்லாவிடிற் பாவிகட்கு மீட்பில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் மீட்புக்குக் காரணமான கிறிஸ்துவின் பாடுகளையே இரவும் பகலும் எண்ணித் தியானித்தல் வேண்டும். இதே நோக்கத்துடன் கிறிஸ்தவின் பாடுகளெல்லாம் இங்கு குறைவறப் பாடப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துமார்க்க சாரமான அன்பு (Love) ஊழியம், (Service) தியாகம் (Sacrifice) என்னும் மூன்றும் சிலுவைப் பாடுகளிலேயே ஒருங்கு திரண்டு கிடக்கின்றன. கிறிஸ்துவின் தெய்வீகத்தையே நம்பாத காந்தியுங்கூடச் சிலுவைத் தியானத்தினால் உலக முழுதும் நடுங்கத்தக்க வண்ணம் மேற்கூறிய மூன்று சக்திகளையும் பெற்றிருப்பாராயின், கிறிஸ்துவையே மெய்த் தேவனென்று வணங்குங் கிறிஸ்தவர்கள் அவரிலும் எத்துணையோ அதிகமாய் அச்சக்திகளை யடையலா மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

உத்தம கிறிஸ்தவன் ஒருவன் பிறப்பின் பண்டிகையிலும் உயிர்த்தெழுந்த திருநாளிலுங்கூடக் கிறிஸ்துவின் பாடுகளையே தியானிப்பான். கிறிஸ்து பிறந்தும் உயிர்த்தெழுந்தும் முன்னமே ஆயிற்று. அவருடைய பாடுகளினால் மீட்புண்டானதேயன்றிப் பிறப்புயிர்த் தெழுதல்களால் மீட்புண்டாகவில்லை. கிறிஸ்து பிறவாமல் எங்ஙனம் பாடுபட முடியுமென்று சிலர் கேட்பர். அது சரியே. ஆனால் கிறிஸ்து பிறந்தும் பாடுபட்டிராவிடின் அவர் பிறப்பினால் என்ன புண்ணியம்? ஆகவே மீட்புக்குக் காரணம் கிறிஸ்துவின் பாடுகளே யென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கவில்லையா?

இனி, உயிர்த்தெழுதலோ தெய்வீகத்தா லுண்டானது; மகிமையும் இன்பமும் நிறைந்தது. அதனால் விசுவாசம் மட்டும் சிலர்க்கு உண்டாகும் அல்லது பலப்படும். மீட்போ சிலுவையிலேயே முடிந்துவிட்டது. 'முடிந்தது' என்ற திருவாக்கே இதை வற்புறுத்தும். பிறப்பின் பண்டிகையும், உயிர்த்தெழுந்த திருநாளும் மகிழ்ச்சியும் இன்பமும் விளைக்கத்தக்கவை யாதலின், மீட்பு முழுதும் திரண்டு கிடக்கும் கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றியும், கிறிஸ்துவை மரண வேதனைப்படுத்தின தங்கள் பாவங்களைப் பற்றியும் கிறிஸ்தவர்கள் எள்ளளவும் எண்ணாது போகின்றனர். பெரிய வெள்ளிக்கிழமையில் மட்டும் (தங்களுக்காக அல்ல) கிறிஸ்துவுக்காகவே வருந்துவதுபோல் நடிப்பவரும் மூன்றும் நாள் உயிர்த்தெழுந்த தினத்தில் (ஆத்துமார்த்தமாக அல்ல) சரீரார்த்தமாக அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆகையால் இடைவிடாத சிலுவைத் தியானத்தினாலேயே கிறிஸ்தவர்கள் அன்பு, ஊழியம், தியாகம் என்ற மூன்று ஆற்றல்களையும் அடைதல் கூடும் என்பதை யறிந்துகொள்க. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவர்களையல்ல, கிறிஸ்துவையே பின்பற்றவேண்டும். இதுவே மீட்பின் வழி.

கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி வேதநாயக சாஸ்திரியாரும் இரத்தினப் பரதேசியாரும், பண்டிதர் சத்தியவாசகம் பிள்ளை அவர்களும் இயற்றிய கீர்த்தனைகள் மிகவும் அருமையானவை. அவற்றையும் படிப்பின் ஆத்துமாவிற் கானந்தமுண்டாகும்.

சிலுவைச் சிந்து.

கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும்

26

இராப்போஜனம். கெத்செமனேத்தியானம்.

'என்னடி நான்பெற்ற மங்கை' என்ற மெட்டு.

பண்டிகையின் முதல் நாளை
மாலை வேளை
தம தாளை—எவிப்
பட்டினத்தில் ஒரு கேளை—அளி
பஸ்கா கொண்டாட வுன்
விஸ்தார வீடெனப்
பக்ஷமா யேசுவுங் கேட்டார்—உடன்
சித்தமே செய்தனர் வீட்டார்.

உங்களிலொருவன் இரவே
என்னைக் கரவே
காட்டித் தரவே—நேரும்
உண்மை யென்றார் ஏசு குருவே—பஸ்கா
உண்ணும் சீடர் துயர்
நண்ணி நானோவென்று
ஒவ்வொரு பேராகக் கேட்கும்—போது
உன்னதன் யூதாசைக் காட்டும்

ஏசுவேயப்பத்தை யெடுத்தார்
ஆசிப்படுத்தார்
பிட்டுக்கொடுத்தார்—இதோ
என்றன் உடலென்று நொடுத்தார்—பின்னர்
ஏனங் கொண்டென் ரத்தம்
பானம் பண்ணுமென்றே
எத்தித்தரச் சீடர் மடுத்தார்—உடன்
எல்லாரும் ஒலிவத்தடுத்தார்

கெத்செமனே என்ற தானம்
இருங் கானம்
பெரு மானும்—தனி
கீழேவிழுந்து தியானம்—சீடர்
கிஞ்சித்து மெண்ணமல்
துஞ்சித்தங் கண்ணாக்
கெட்ட தென்ன அவர் மதியே—மிகத்
தட்டவும் மன்னவன் விதியே

சாகரமென்ன விசாரம்
பவப் பாரம்
ஏசு சோரும்—அன்று
சாத்தானின் பேரதிகாரம்—அந்தச்
சங்கடம் நீங்கவே
தந்தையை வேண்டியே
சாய்ந்து துயில் சீடர் ஓரம்—வந்து
தட்டியெழுப்பினர் நேரம்

27

யூதாஸ் காட்டிக்கொடுத்தது, காய்பாவின் விசாரணை, பேதுரு மறுதலித்தது.

பாதி ராத்திரி வேளையில்' என்ற மெட்டு.

காவனந்தனில் ஏசுவின் புறம்
காதகன் யூதாஸ் வந்தான்—அவர்
கன்னத்தில் முத்தந் தந்தான்—பணக்
காரியத்தைப் புரிந்தான்—யூதர்
கர்த்தன் ஏசுவைக் கைப்பற்றச் சீடர்
காற்று யோடிப் பறந்தார்

பேதுரு மிக வேக மாயுறை
பேர்த்த கூரிய ஈட்டி—உறப்
பிடித்த கையை முன் நீட்டிச் சினம்
பெருகவே மறங்கூட்டி—அங்கே
பேராசாரியன் வேலைக்காரனைப்
பேதித்தான் காதைத் தீட்டி

தம்பிரானது கண்டதும் மனம்
தாங்காமல் முகங் கடுத்து—மிகத்
தட்டினார் கையைத் தடுத்து—சீமோன்
தரித்தான் வாளுறை மடுத்து—தேவ
தாசரும் முனங் கூறிய தீர்க்க
தரிசனம் வந்ததடுத்து

கோமான் ஏசுவைக் காய்பாவின் மனை
கொண்டுபோய் யூதர் சேர்த்தார்—அங்கு
கூடினார் சபை மூத்தார்—உடன்
கொல்லவே வழி பார்த்தார்—சிறு
குற்றமேனு மகப்படாமையால்
கூறிப்பொய்களைக் கோர்த்தார்

ஆலயக்குறை கூறினார் பரன்
அமைதியாகக் காய்பாவும்—அவர்
அரசரீகம் வினவும்—அவர்
ஆமென்ற உரை பாவம்—என
ஆடையைக் கிழித் தேசுவை மரத்
தறைய மூப்பரை யேவும்

காதகப் பெரு யூதம் செய்தது
காரியத்தாறு மாறும்—ஏசு
கன்னத்தில் எச்சில் நாறும்—அவரைக்
கடிந்து குட்டிடுந் தோறும்—ஞானக்
கண்ணால் யார் வதை பண்ணினரென்று
கண்டு சொல்லெனக் கூறும்

காய்பாவின்மனை யோரமாய்க் குளிர்
காய்ந்த பேதுரு இறையே—என்றுங்
கண்டதில்லென்ற மறையே—மிகக்
காணவே மூன்று முறையே—கூவுங்
காலைச் சேவலைக் கண்டு சிந்தினன்
கண்ணீருங்குட நிறையே

28

பேதுரு மனங்கசந்தழுதது.

'தியானமே வரமைன' என்ற மெட்டு

தன்யாசி — ஆதி

பல்லவி

பாவிநான் பரமையன் பங்கே பாகமும் பருகாத் த்ரோகி (பா)

அனுபல்லவி

சேவல் கூவு முனமே மும்முறை தேவ
கோவை மறுத்தேன் கொடிதென் பாவக் குறமேவ (பா)

சரணம்

கரணமே வேகும் கசந்தழு மேகம்
கரை கொன்றது வெள்ளம் கரைந்தெவனுகும்
மருவுவென் ஏசு மாதவன் பர்தம்
மன்னிப்புமாகும் மறவே னொருபோதும் (பா)

29

போந்தியுப்பிலாத்தின் விசாரணை
ஏசுவின் மரணக்கினை.

'சேந்தில்மா நகர்' என்ற மெட்டு.

பஞ்சபாதக மிஞ்சிய யூதரும்
பானு வெழுந்தபின் கூடி—ஏசு
வானவனைக் கொல்ல நாடி—மிகு
பக்தனத்தொடு பொந்தியுப் பிலாத்
தின்காத்திடை கொண்டுவிட்டனர்
பங்கமா மரணந்தனுக் காளான
பண்ணவன் தீர்ப்பினைக்கண்டு—யூதாஸ்
பாதகனுந்துயர் கொண்டு

முந்து நாளதில் வந்தவெண் காசுகள்
    மூப்பரிடங்கொண்டு சென்று—திரு
    மூர்த்தியைக் காட்டினே னென்று—அவர்
  முன்பு தன்பிழை கூறி முப்பது
  வெண்பணங்களை மீளவைத்திடு
முந்தியே யவர் எங்களுக் கேனென
    முன்னவன் கோயி லெறிந்தான்—பின்பு
    முடுகிப்போய் நான்று முடிந்தான்

அந்த மாபண மூங்கறை மாவிலே
    ஆகாது காணிக்கை யென்றே—உடன்
    ஆசாரியர் நிலங் கொண்டார்—அங்கே
  அன்னியப் பிணமடக்க வேளிடம்
  இன்னு மப்புலம் இரத்த மாநிலம்
அன்றெரேமியா முந்துரை வாசகம்
    ஆனது வே நிறைவேறி—உரை
    வீணுறு மோதாசன் கூறி

புந்தி யாகவே பொந்தியு ஏசுவைப்
    பூபதியோ வென்று கேட்டான்—அவர்
    புகன்றபடி யென்னக் கேட்டான்—யூதர்
  பொய்ப்பெருங் குறைகூறவே திரு
  மெய்ப்பரன் பதில் மாறவேயிலை
புண்படாது வியந்த தேசாதிபன்
    போற்றூர் பொறுமையைக் கண்டான்—இரு
    புரையரில் யார்க்கு வீடென்றான்

மன்று பீடம மர்ந்துள வேளையில்
    மகிபன் பிலாத்துவின் தேவி—ஒரு
    மனுஷனையே விரைந்தேவி—அந்த
  மாதவத்தனை நீவருத்தலி
  ராவிலத்தனை பாடுபட்டனென்
மண்டலாதிப கண்டுகொளே யென
    மகிணனிடஞ் சொல்லச் சொன்னாள்—ஒரு
    மழலைமொழிக் கிள்ளை யன்னாள்

பண்டிகையுற வந்தவ ரேவலால்
பரபா சை விட வென்று கேட்டார்—ஏசு
பரமனை யறையவே வேட்டார்—அந்தப்
பாமரக்குழு படியப் பொந்தியு
தானடக்கவு முடிதற்கின்றெனப்
பங்கு நானில்லை இந்த மகான்பழி
பாருமென்றே மண்ணிக் காட்டும்—அந்தப்
பழியெங்கள் வழியென்னுங் கூட்டம்.

அந்த நேரமே பொந்தியு வாணையில்
அரிய கள்ளன் சிறை வீடு—தேவ
மறியின் சிலுவையிற்பாடு—உடன்
அரமனைப் படை வீரர் யாவரும்
இருதிறப்பட மேவி யேசுவின்
அங்கவாடை விலங்கவே சேயுடை
அணிந்து முண்முடி தலை மேலே—கரம்
அளித்தொரு மூங்கிற் செங்கோலே

முன்பு யூதமன் வந்தனம் வாழ்கென
முழங்காற் படியிட்டு வாழ்த்தி—அவர்
முகந்தனில் உமிழ்நீரை வீழ்த்திக்—கா
மூங்கிலாலவர் சிரமறைந்துடன்
வாங்கு சேயுடையது பகிர்ந்தபின்
முந்தையாடை யணிந்துடனேகினர்
முதுகாடு தான் கொல்கதாவே—பின்பு
மொழிய வரவில்லை நாவே.

30

ஏசுவானவர் சிலுவையைச் சுமந்தேகினது.

இராகம் — சேஞ்சுருட்டி. **தாளம் — சாப்பு.**

கண்ணிகள்

சிலுவை சுமந்திதோ செல்கிறார் சாமியே
கொலுவை நினைந்தொரு கொல்கதாப் பூமியே

கட்டியங்காரனுங் காரணங் கூறவும்
திட்டியே சேவகர் தீவிரஞ் சேரவும்

பாரிலுள்ளோர் செய்த பாவங்கள் யாவுமே
பாரமாக எய்தப் பாரித்த நோவுமே

ஆகார முண்ணுமல் ஆவி யொடுங்கவும்
தேகமோ புண்களால் தேங்கி நடுங்கவும்

நித்திரை யில்லாமல் நியாயம் விசாரித்துக்
கட்டியே கண்களும் காந்தி யெரிவுற்று

வையமெய் பேயுடன் வாதை மல்லாடியே
கையயர்ந்து பின்னே கால்கள் தள்ளாடியே

கேடுகெட்டபவக் கேளைத்தழுவுறப்
பாடுபட்டே வரும் பாரச் சிலுவையைத்

தாங்க முடியாமல் தஞ்சமே வீழவும்
ஆங்கொரு சீமோனை அன்றினர் ஆளவும்

கல்வாரி மாமலை கண்டு சமீபமே
கொல்வாரே கோதில்லாக் குன்றை என் பாவமே

31

ஏசுவைச் சிலுவையி லறைந்தது.

'திருவுற்றிலது கங்கை' என்ற மெட்டு.

அமரச் சேவகரேசு குமரக்கடவுளானை
அறையச் சிலுவை யோடு சென்றனர்—அந்தப்
பொறையைச் சீமனதாகு மென்றனர்—களி

ஆடு கூளிகள் பல்கிமேவுக
பால மேகிறை கொல் கதாவிடம்

அடையக் கசந்த கள்ளைத் தந்தனர்—கொள்ளப்
பரமற் கிருந்ததில்லை சிந்தையே

குருசிற்பெரிய வாணி யுருவப் பரமனேசு
குருவைக் கையொடு காலறைந்தனர்—அவர்
உடையைப் பகிரவே விரைந்தனர்—அந்தக்

கோதிலாதகு மரனை யன்றிவர்
யூத காவல னென வரைந்ததைக்

குருசிற்சிறந்த மிசை மாட்டினர்—ஏசு
குரிசிற் புரிந்த பிழை காட்டினர்

கிருபைக்கு மாறேடும் இருபக்க மிருசோரர்
கெழுமச் சிலுவையறை மேவினர்—வீரர்
குழுமிப்புரியு நீடு காவலர்—அங்கே
கேசகம்பித பாதசாரிகள்
கீழிறங்கும கேசனேயெனில்
கிருதிற் கோயிலழித்த பின்றை நாள் மூன்றில்
நிருமிப் பாயுனோரட்சி யென்றனர்

அவரைப்போலவே யூத குரவப் பாரகமூதர்
இவனிப்போ திறங்குக நம்புவோம்—இவன்
அயலுக்கே புரந்த வரம்பினான்—முனம்
ஆண்டவன் கரம் நம்பினானவர்.
வேண்டிவின்று மிரங்க வேயென
அருகிற் சிலுவையிடச் சோரனும்—அந்த
வகையிற் பழிமொழியைக் கூறினன்

அறுமிக்க மணியாதி நவமுற்ற மணிகாறும்
அவனிக்கிருள் பரக்கத் தேவனை—எசு
அகதிப்படவுரக்கக் கூவினர்—சிலர்
அகவினு னெலியாவை யென்னவோர்
மகனருவுறு காடி தன்னையே
அவருக்கொரு கழையில் நீட்டினன்—அவர்
அகவித் தமதுயிரை வீட்டினர்

வலமைத் தேவக நீடு திரையிற் கீழ்வரை கீள
மகிமிக்கே யதிர்ந்தது கம்பமாய்—பெரு
மலைமிக்கே விளக்தன துன்பமாய்—பல
வால மாதவர் உயிர்த்தெழுந்தபின்
சால மாநகரிடைத் தெரிந்தனர்
மகிமைக் காரியமாகக் கண்டவர்—இவர்
அருமைத் தேவகுமாரன் என்றனர்

சரணப் பணிவிடைகள் புரியப் பரமனோடு
சதுரக் கலிலேயாவை நீங்கின—பல
மகரக்குழையமாதர் ஏங்கினர்—கதிர்
சாயும்வேளை யோசேப்பு நம்பனின்
காய மோது பிலாத்துவுக்தரத்
தயிலத்தினை மிகுத்துப் பெய்தனன்—ஒரு
சயிலத்திலே யடக்கஞ் செய்தனன்

திருடிப் பழகிகாமும் சிலுவைப்பட நியாயம்
சிரமப்படவே யிந்தத் தூயவர்—என்ன
கருமப் பதகஞ் செய்யலாயினர்—என்று
தேவனே யுமதரசி லென்னையும்
காவுமே யெனவலது கள்ளனும்
திருவிற் பெரிய பரதீசிலே—இன்று
மருவப் பெறுவை யென்றார் ஈசனும்

32

வலதுபாரிசத்துக்கள்ளன் வேண்டுதல்

'ஸ்ரீரகுவர' என்ற மெட்டு.

(வேண்டுதல்)

பல்லவி

ஆண்டவா உன தடியேனையும்
அரசுறும் வேளையில் ஆளாய் சேராளா

(நெஞ்சொடு கூறல்)

அனுபல்லவி

நாமேதம் செய்தம் நன்றாகுக் தண்டனை
கோமானிவரிற் கூறவோர் கோதுமேது (ஆ)

(பரதீசு பெற்றபின் பரவல்)

சரணம்

தேவகுமாரா திரு அவதாரா
பாவியெனக்கும் பரதீசுபகாரா (ஆ)

33

சிலுவையின் ஏழு வசனங்கள்.

இராகம் — காப்பி **தாளம் — தீஸ்ர ஏகம்.**

முகவுரை.

பாவிகட்காய்ப் பாரில் வந்தே பாடுபட்டுத் தேகநைந்து
தேவமகன் சிலுவையுரை திவ்யமணி ஏழுமன்பு
சேவைபலித் தேசுபெறச்சிந்தி நெஞ்சே

1 எந்தையேநீர் இவர்களுக்கு மன்னித்திடும் தங்கள் செயல்
இன்னதென்றே அறியாதிருக்கின்றனரென்றேசிரந்தார்
முன்புரைத்த அன்புபொறை பண்புறவே

2 என்னையுந்தன் அரசிலெண்ணும் என்றவலக் கள்வனுக்கே
இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிருப் பாயென்றனர்
எம்பெருமான் வீடளிக்கும் எத்தார்க்கும்

3 மாதேயதோ உன்றன்மகன் யோவானதோ உன்று யென்ருர்
மாதாகடன் அன்புமிகும் மாணவனின் மைந்த நிலை
போதரத்தம் தேவிகமும் புண்ணியனுர்

4 என்தேவனே என்தேவனே ஏனென்னைக்கை விட்டீரென்றே
ஏனைமொழி ஏலிஏலி லாமாசபக் தானி யென்ருர்
மானிடனுய்ப் பாடுபட்டே மாண்டதிறம்

5 தேகமதால் நீரின்மேலும் தேவிகத்தாற் பாவிமேலும்
தாகமாக இருக்கிறேன் நான் என்று சொன்னர் தம்பிரானும்
பானமின்றிப் பாய்ந்திரத்தம் போன நிலை

6 பாவம்பட நாகஞ்சாவு பாதாளம் பேய் மீது வெற்றி
சேவகமோ வேதனையோ ஜீவமீட்போ முடிந்ததென்ருர்
பாவபலி யானபெருந் தேவமறி

7 எந்தையேஉம் கைகளிலென் ஆவியை ஒப்புவிக்கின்றேன்
என்றுரக்கக் கூவியுடன் எம்பெருமான் மாய்ந்தனரே
தந்தையொடு தாமொருவ ரென்றதகை

34

மாதர் புலம்பல்.

'மேரே மௌலா' என்ற மெட்டு.

பாதார விந்தமே பாவியின் சொந்தமே
காதா பணிந்தமே நம்பியிருந்தமே
நானிலத்தும் மேனிலத்தும் நாதனே நல்வேதனே
ஈனரைப் போல் ஏனுனக்கே எல்லை யில்லா வேதனை

என்னே கொடுமையீ தெங்கணு முள்ளதோ
முன்னோர் கனவிலும் முன்னின தில்லையே
பாதகப் பகைவர் பல பந்தமாய்நிர்ப் பந்தமாய்க்
கோதில்லா மெய்க்கோ வுனையுங் கொல்லமனம் வந்ததோ

குற்றமில்லாமலே கொல்லவும் நீதமோ
கொற்றவனுனையும் கொல்லுவார் போதமோ
ஆணிகைகாலேறி ரத்தம் அருவியாய்ப் பாய்ந்தோடுதே
மேனியெல்லாம் மாறித்தாகம் மிஞ்சி முகம் வாடுதே

ஐயோ இத்தொல்லையை ஆரிடஞ் சொல்லுவேன்
மெய்யே இப்புல்லரை மேதினி கொள்ளுமோ
வாரடிகள் வீங்கியந்தோ வரைவரையாய்த் தெரியுதே
வாதை யெங்ஙன் ஆற்றுவாயென் வயிறுபற்றி யெரியுதே

வல்லோரைத் தெய்வமும் வருத்த வில்லையே
பொல்லா விரோதிகள் புத்திர முள்ளதே
தேகமெல்லாம் நோவு மீறித்தியங்கி நீ கலங்கவும்
ஆகடியமாய்ப் பலரும் அவதூறு முழங்கவும்

தேவா இவ்வேளையோர் திக்கு மில்லாமலே
ஆவா நீ போகமுன் அக்கர மானதோ
பாவிகளுக்காகவேயிப் பாரில் பாடு பட்டவா
காவகச் சிலுவைமீது கதறியாவிவிட்டவா

கல்லேலயெனுதகம் கையறும் வேளையும்
வல்லே யருதினும் வைகுமென் ஆவியும்
ஏசையா உன்இன் முகத்தை என்றுநான் கண்டாறுவேன்
இன்னல்வாரியின் நடுவில் எங்ஙன்கரை யேறுவேன்.

35

சிலுவைத் தியானம்.

'கத்தனவாரிகி' என்ற மெட்டு.

பல்லவி

எத்தனை வேதனை இத்தரை ஈனக் குருசின் மீது
இத்தகை யாகவும் ஏது குற்றம் செய்தாய்

அனுபல்லவி

அத்தனே ஏன் என்னைக்கை விட்டீரென்ற ரற்றியொரு
சுத்தவ நாதையாய்த் துன்புற ஏது காரணம் (எ)

சரணம்

மட்டில்லா மகிமையின்பம் விட்டு மானிலத்தில் வந்து
எட்டுணையும் இதமின்றி ஏளனமாகிச்
சுட்டெரிக்கவு முதவாத சட்டகம் நானென்று பற்றிக்
கெட்டதோர் நாயினுங் கேடுறுங் கேவலம் எனைமீட்க (எ)

36

'புள்ளிக்கலாப மயிற் பாகன்' என்ற மெட்டு.

வெள்ளிக்கிழமை வெயில் நேரம்—மனம்
வேகுங் கல்வாரிமலை யோரம்—மன
வேதனை மிகக்கடந்த
வேதனை மரத்தறைந்த வீரர்
பழிகாரர்

முள்ளின் மகுடம் முடிமேலே—ஒரு
மூங்கிற்கழை கரச் செங்கோலே—அந்த
மூவுலக வேந்த னொரு
பாவமிகு மாந்தனெனச் சிலுவைப்
பெறுங் கொலுவை

ஆணி கைகாலிணைகள் ஏறிப்—பல
அருவிப்பட இரத்தம் பீறி—மிக
அவதிப்படத் துறந்த
அகதித் திறத் திறந்த தேனே
பழி நானே

வாரிலொரு வடமேபின்னி—உடன்
வளைத்து வருத்த ரத்தங்கன்னிப்—புலி
வருணம் பெற உடம்பு
விரணம் படுந் தழும்பு தடிக்கும்
ஒவ்வோர் நொடிக்கும்

பச்சைப்புண்ணிலே வடிவேலே—உறப்
பதித்த பெருங்கொடுமை போலே—குட்டுப்
பட்டதலை குத்திமொரு
கட்டு முள்ளை யிட்டதென சிரமோ
அது மரமோ

சுந்தர முகமெல்லாம் எச்சம்—பவ
சோதனைக்காரன் வந்து மெச்சும்—இரு
சோர ரொடு பாத சாரி
வீரர் பலர் கூறும்பரி காசம்
அலை கேசம்

தாங்கமுடியாப் பசி தாகம்—பச்சைத்
தண்ணீரு மில்லை யவர் பாகம்—திருத்
தங்கமேனி வற்றலெனப்
பங்கமாக நிற்றலென பாவம்
பரி தாபம்

பஞ்ச பாதக பரிகாரம்—அவர்
படிவத்தி லைந்து காயம் பாரும்—திருப்
பாதத்தே விழுந்தழுது
பாவத்தை முனங்கழுவ வாரும்
கண்ணீர் வாரும்

37

'மஞ்சுநிகர் குந்தளமின்னே' என்ற மெட்டு.

நெஞ்சமே நினைந்துபார் முன்னே—நிருதவீரர்
குருசிலார
நிந்தையா யறைந்த மாமன்னே—அந்த
நீதனும்பெரு வேதனையுற
மோது மென்பவ மேதுசெய்குவேன்
நின்று முழங்காலில் நீடியே—அழுதலறித்
தொழுதிடுவென்
நேசமா மகாரை நாடியே

முப்பதின்மேல் மூன்றும் அரையும்—பருவம்வரச்
சிலுவையதில்
மூப்பராசாரியர் அறையும்—ஒரு
முள்ளின் மாமுடி யெள்ளவே பெருங்
கள்ளனுயினர் வள்ள லேசுவும்
முன்பு யூதர் கொண்ட மதமே—முடியும் வரை
ஒரு பிடியாய்
முண்டு செய்து கண்ட வதமே

பொந்தியுப் பிலாத்து பதியே—புரையரினம்
இரைய மனம்
போலவே மயங்கும் விதியே—யூதர்
புத்திரத்தையே பெற்றதில்லையோ
எத்திறத்தவர் செற்ற தென்னையே
புல்லியர்க்கே யிந்த ஞாலமே—புனிதமுள
இனியகுண
நல்லவர்க்கோ இல்லை காலமே

சிந்துர மிகுந்த காயமே—சிந்தாமணியோ
நந்தாவொளியோ
சேயிடை பரந்து பாயுமே—அதைச்
சிந்தை நொந்து மிகுந்து சிந்தியே
அந்தி சந்தி விழுந்து வந்தியே
சீரை யோடிருந்த வண்ணமே—செந்நீர் பருகிப்
பின்னே முழுகச்
சேரும் வெள்ளைத் தூயவண்ணமே

38

'தோடுடைய சேவியன்' என்ற மெட்டு.

பாரின்பவப் பலியாய்ப் பர மாசுதன் பாவிகளை மேவி
சோரும் வெயில் கரங்கால்களில் சோரவோர் சோரிமிகுமாரி
கூரும்பல குடையாணிகள் கூடமே கொண்டறைய வன்றே
சோரன் போலச்சிலுவை யறையுண்டதும் சுணங்கனென்னு
லன்றோ

முள்ளின்முடி யுமிழ்நீரொடு சேயுடை மூங்கிற்கழை தாங்கி
எள்ளன் மொழி யெழுதியெதிர் ஏசவும் ஏதும்புகலாதே
வெள்ளம் போலக் குருதிவழிந் தோடநீர் வேட்கை மிக விஞ்சி
கள்ளன் போலச் சிலுவையறை யுண்டதும் கயவனென்று
லன்றோ

பருமன் மிகுமட மாமதப் பாதகர் பட்டினியிற் குட்டிக்
கருமன்வினைக்கரமே கொடு மோதவும் கன்னஞ்செனி கன்னித்
திருகும் வெயிற் பசிதாகமும் தீராமல் தேக மெலிவாகத்
திருடன் போலச் சிலுவையறை யுண்டதும் தீயேனென்று
லன்றோ

39

சுவிசேடகன் கிறிஸ்தியானுக்குச் சிலுவையைக் காட்டிச் சொல்வது.

'கதர்க்கப்பல்கொடி தோணுதே' என்ற மெட்டு.

வசந்தா — ஆதி.

(நாதநாமக்கிரியை — ஆதியிலும் பாடலாம்)

பல்லவி

பவச்சுமை தாங்கி பாரதோ!
பரும்பின்மேல் ஏசுகிரு பாகரன் சமாதியோரம்

அனுபல்லவி

பாவியினைப் பாறுந்தானம்
பரிசுத்தாவி யாதீனம்
ஜீவியப்ர சாதபானம்
சிறந்த கற்பகங்கானம் (ப)

சரணம்

1 வருந்திச் சுமக்கும்பாவி வருந்து விரைந்து மேவி
பொருந்திச் சிலுவை சேவி புரண்டுபோம் பாரந்தாவி
புனைமாறும் பண்டை
வினைபாறும்
புத்தகம்பின் பாதை கூறும் (ப)

2 தேவமறி தாகங்கொண்டு தேடிவந்தன்பாய்த் திரண்டு
பாவியுனக்காக வன்று பாடுபட்டுத் தேகம் நைந்த
பலிக்கம்பம் வெற்றிக்
கொடித்தம்பம்
பக்கம் சென்றாலும் பேரின்பம் (ப)

வகுந்து = வழி. புனை = ஆடை.

40

உயிர்த்தெழுதல்.

'தசரத ராஜ குமாரா' என்ற மெட்டு.

கதிரவன் நாளதிகாலே
மரி யாளே பரி வாலே விரை வாளே

கல்லறை வெறுமையாக் கண்டனள் முனமே
கர்த்தனுயிர்த்தா ரென்று கழறுந் தேவினமே
மெல்லிய லழுதுபின் மீளுறு கணமே
மேசையன் வடிவொன்று கொண்டார்
அயல் நின்றார் மரி யென்றார் தமை விண்டார்

ஏசு மறைந்தவுடன் இன்புறு மரியாள்
ஏகினள் சீடரிடம் இமையதுந் தரியாள்
தேசுறு மகிழுரை தெரிப்பதற் குரியாள்
தேவ மகிமையறி சீடர்
மகிழ் கூட நடமாடத் துதி பாட

எம்மாவூருக்கிருவர் ஏகினர் சீடர்
இடைவழி மருவினர் ஏசுவுங்கூடத்
தம்மாலியன்றவரை தகவுரையாடத்
தமையறியாது வழிபோகும்
பெரு வேகம் கதிரேகும் இருளாகும்

கோமகனுரைகளைக் கோளாளர் தெரிந்தார்
கூறியபோதேயுளங் கொளுந்து விட்டெரிந்தார்
சேமவிடியல் வரச் செல்லுமென்றிரந்தார்
தேசிகனு மிணங்கி யிருந்தார்
ஒரு விருந்தார் முற்று மருந்தார் உருக் கரந்தார்

41

பரமேறுதல்.

'நீலகண்ட மகாதேவா, என்ற மெட்டு.

இராகம் — வசந்தா தாளம் — ரூபகம்

பல்லவி

மேக வாகன மீதி லேறி
மேசையாபர மேவி யேறும்

அனுபல்லவி

தேகமோடுயிர்த் தெழுந்து மேலே
ஆக காற்பதும் அருமை நாளே (மே)

சரணம்

ஆவலாய்ச் சீடர் அவனி நீட
அணுகி நின்றனர் ஆற்ற வொண்ணுமோ
தேவதூதரும் இவ்வகை ஏசு
திரும்பு மென்றனர் தேற்ற வெண்ணியே (மே)

42

கிறிஸ்து பிதாவின் வலதுபார்சத்திலிருந்து பாவிகளுக்காகப் பரிந்து பேசுதல்.

'நன்னுபாலிம்ப' என்ற மெட்டு.

பல்லவி

மன்னியுந்தேவ மகிமை எ கொவாவே
மாந்தர் பாவமே

அனுபல்லவி

கனிதராமரமே கனலுற வேண்டாம் தொட்டே
இனிதெரு விடுவேன்நான் இனுமொரே ஆண்டுமட்டே (ம)

சரணம்

நிலவுலகேகி நிரப்பொடு நிந்தையாகி
நிலந்தலை சாய்க்கவும் நிற்கவும் நேரமின்றிச்
சிலுவையில் வேதனை சிறந்து பாடுபட்டுச்
சிறுமையுடன் மரித்தே தீர்த்தனென் பாவப்பாரம் (ம)

தொட்டு = தோண்டி, கொத்தி. நிரப்பு = வறுமை.

43

மெய்த்தேய்வம்.

'அருட்சோதித் தெய்வமென்னை' என்ற மெட்டு.

பந்துவாரளி — ரூபகம்.

நாதாந்தத் தெய்வமென்னை நாடிவந்த தெய்வம்
நம்பனிடத் துயிரொளியும் நண்ணிய மெய்த்தெய்வம்
ஏதேன்றன் இறைவன்பணி எதிருரைத்த தெய்வம்
ஈசனடியார்களுமுன் இசைத்த பெருந் தெய்வம்
வேதாந்த சூரியனாய் விளங்கிய மெய்த் தெய்வம்
வியனிலத்தில் மாமிசமாய் விளைந்த மகத் தெய்வம்
போதாந்தம் படவருக்கே புகன்றளித்த தெய்வம்
பூமியெங்குந் திரிந்துநலம் புரிந்த பெருந்தெய்வம்.

மனந்திரும்பும் அரசுரைவாய் மலர்ந்தபெருந் தெய்வம்
மறுவுடையு மில்லாமல் வறுமை கொண்ட தெய்வம்
தினந்தினமும் நடந்துபதம் தேய்ந்துளைந்த தெய்வம்
சிரஞ்சாய்க்க இடமின்றிச் சிரமமுற்ற தெய்வம்
இனஞ்சனமாய்ப் பாவிகளை ஏற்ற பெருந் தெய்வம்
ஈனருடன் விருந்துண்ட எளியவரின் தெய்வம்
சினஞ்சிறிய வருக்குமிகச் சேவை செய்த தெய்வம்
சீடரடி கழுவியவர் செருக்கழித்த தெய்வம்.

பட்டினியாய்ப் பசிதாகம் பரந்தெழுந்த தெய்வம்
பலமான வாரடியும் பட்டபெருந் தெய்வம்
குட்டி மிகு பாதகரும் குறைவுறுத்த தெய்வம்
கோரமிகுஞ் சிலுவையிலே கொலையுண்ட தெய்வம்
மட்டில் பெரும் பகைவருக்கும் மன்னிப்புரை தெய்வம்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்த பெருந் தெய்வம்
திட்டியிடச் சோரனுமுன் சிறுமைசெய்த தெய்வம்
திருடனுக்கும் பெரியபரதீசளித்த தெய்வம்

படமுடியாப் பாடுபட்டே பரிதபித்த தெய்வம்
பாவியெனக் காருயிரும் பரிந்தளித்த தெய்வம்
சடமுடனே உயிர்த்தெழுந்த சத்தியமாந் தெய்வம்
தரிசனமுஞ் சீடருக்குத் தந்த பெருந் தெய்வம்
படருமொளி மேகமிசை பாத்தெழுந்த தெய்வம்
பரமவலம் வீற்றிருந்து பரிந்துரைக்குந் தெய்வம்
திடமுறவே யெனையாண்ட திருக்குமர தெய்வம்
திருவருளைச் சிறந்தளிக்கும் திவ்வியமெய்த் தெய்வம்.

தானாகித் தனியாகித் தழைத்த பெருந் தெய்வம்
தனக்கெனவாழாத பெருந் தனிக்கருணைத் தெய்வம்
கோனாகிக் குருவாகிக் கூறுவிக்குந் தெய்வம்
கொடியனெனை யாளுகந்து கொண்டாடுந் தெய்வம்
ஊனாகி யுயிராகி உள்ளமர்ந்த தெய்வம்
உடம்பிறப்பு முறையுமெனக்கு வந்தளிக்குந் தெய்வம்
தேனாகித் தெளிவாகித் தெவிட்டறியாத் தெய்வம்
திருவலமன்றாடுகின்ற தெய்வமதே தெய்வம்.

44

நெஞ்சோடு கூறல்.

பூரிகல்யாணி — சாப்பு

ஏசு தேவனே இந்நிலத்தார் பலர்
ஏசு மேழையாய் இன்னுயிர் ஈந்ததால்
நீச நாயன நீயும் பின் பேரின்ப
வாசனான வகை நினை மனமே

பாடுபட்டிரும் பாரச்சிலுவையிற்
கூடுவிட்டிகங் குலையுவுங் கோமகன்
கேடுகெட்டறக் கீழான வுன்னையும்
வீடு விட்ட விதம் தெரிமனமே

காவுபாரத்தைக் கடிதிலகற்றியே
தாவம் நீடுயிர்த் தண்ணீரி லாற்றுவென்
பாவி காளெனப் பரிந்தழைக்கும் பரன்
ஆவலெண்ணியும் அறிதியோ மனமே

பொன்னைத்தானியப் பூமியைக் கானடை
தன்னைப் பேணிலாத் தற்பரன் எண்மையில்
உன்னை வேண்டவும் உறழுதியோ நெஞ்சே
என்னை பேதமை இனையவருளரே

தூண்டிலின்பமே துவன்று மூலகுனே
ஆண்டு கொள்ளவும் ஆசைப்படுதியே
நீண்ட இன்பமே நின்னை யுறுத்தவும்
வேண்டு மேசுவை விடுவதோ மனமே

விரும்பி யாவையும் விட்டுனைக் கண்கணீர்
அரும்ப எசுவும் ஆனந்த மேந்தினர்
கரும்பு தின்னவுங் காமறு வாரெவர்
இரும்பு கல்பிற இளகுவ மனமே

மலைவருந்துயர் மாயுங்கதிர்ப்பனி
அலைவரும் பகை ஆயிரர் என்செய்வர்
தலைவருந் திருத் தள்பவோ தானினல்
துலைவரும் எனம் துன்மன முனக்கே

45

திருச்சபைக்கு எச்சரிப்பு.

'கற்பிற்சிறந்த எந்தன் கனியே' என்ற மெட்டு.

சத்திய வேதத்திருச் சபையே
தவிர் நவையே கிறிஸ் துவையே பணி குவையே

பத்தியின் கனியில்லாப் பாழ்மரம் இனியே
பரசினலறையுண்டு படர்ந்திடும் வனியே
அத்திமரம் பட்டதே அளியாது கனியே
ஐயா இவ்வாண்டு மிந்த மரமே
இட உரமே கனி தரமே எனுஞ் சிரமே

பொறுமையுடன் கிருபை புகழ் பரிதாபம்
பொற்பரன் கொண்டபோதே போக்குவாய் பாவம்
இறுதியில டைகுவர் எல்லையில் கோபம்
எதுஞ் செய்துமறுத நீதம்
ஒரு போதும் இலை பேதம் தெளிவேதம்

திருடன்போல் மணவாளன் திடுமென வருவார்
தெரிந்து கொண்டவருக்கே திகழ் பரந்தருவார்
கருடன் கண்டபணிபோல் கலங்குவர் மருவார்
காலமெல்லா மவர்; நிக்கிரகம்
கல்லு முருகும் எரி நகரம் துயர்பெருகும்.

46

கிறிஸ்துவை வேண்டுதல்.

காப்பி — ஏகம்.

மகிதலக் தனில் வந்த மனுவேலா—பெரு
மாபாவிகளுக்கோர் அனுகூலா
மறமதை வெறுத்தே
திறமுடன் பொறுத்தீர்

மலைமிசை திகழ்வரு மறுரூபா—மன
மாயாதி கடந்த மகதேவா
மாமுதல் இறந்தே
பரமதில் சிறந்தீர்

மகிமையில் வருமெழில் மணவாளா—என்றும்
மாறாத தரும குணசீலா
மகிழ்பரந் தருவீர்
புகழ்பெருந் திருவீர்

47

கிறிஸ்துவின் 2ம் வருகை.

'ஓலமிட்ட சுரும்பு' என்ற மெட்டு.

சந்தக் குழிப்பு.

தான தனன தன தனதனதன
தான தனன தன தனதனதன
தான தனன தன தனதனதன தனதான

பாதியிரவு புயல் பளீர் பளீர் என
மீது கடவுபர மகா மகா முன
மோத முறைமை வரு களா களா வென அமரரோடே

மாதிர முழுவது மடா மடா வென
போதென வுதிருடு பொலீர் பொலீரென
வேது படவு மிடி திடீர் திடீரென வருகை நாளில்

மேதினி கலறைகள் படீர் படீரென
பாதகர் வயிறகம் பகீர் பகீரென
நீதியர் முகமுழு நிலா நிலாவென நகையராக

கோதுறு நரசெரி குபீர் குபீரென
மீதல சுகவறை மிஞு முஞுவுற
எதை யெனையுமுள மெஞுதிரேல் ஒளிர் திருமஞுளா

48

'ஜயஜயகோ துலபால' என்ற மெட்டு.

பைரவி — ரூபகம்.

பல்லவி

தினகரதீ விரகோடி திகம்பரமாதிர மூடி
திரளாய் வானோர் கூடி தேவ மாமணமோடி

அனுபல்லவி

தேவரடியவர் சகிதம் தீவிய கா கள காதம்
தேவசுதன் திரு மாரதம் தேஜோமயமே வாரிதம் (தி)

சரணம்

வா.னே மீன் உகுபோதே வையககம் பகமீதே
ஈ.னேகயவர் கோதே எகாங்கி புக வேதே (தி)

புனமங்க ளாகரமே புது நிலமுங் ககனமுமே
வினைமுதிர் சிங்காசனமே விகசிதம் ஆளுகை சதமே (தி)

49

நடுத்தீர்ப்பு

ஏசு வலது பக்கத்தார்க்குச் சொல்வது.

'சுதண மூலே' என்ற மெட்டு.

பல்லவி

வலமுக மெய்ப் பக்தரின்றே வந்துற வரபோகம்

அனுபல்லவி

உலக முண்டானது முதலாய் உங்கட்கமைந்த அரசுற (வ)

சரணம்

நானே பசிதாகம் பிணி ஆனேன் அயலெனினும் போனக
பானுதிகள் உவந்தளித்த பாரோப காரிகணீர் (வ)

50

இடதுபக்கத்தார்க்குச் சொல்வது.

'எதுடநீ' என்ற மெட்டு.

பல்லவி

இதொடேக இடவீர் ஏது மின்றி
ஏற்றீர் சாபமே

அனுபல்லவி

இதிதன் தூத ரோடிறங்கவே யமைந்த
இறுவா யில்லெரி ஏகி வேமினே (இ)

சரணம்

தரா தலமுனமென் சிறூர் பசிமிகவே
பரா முக மிருந்து தரா துணவுடைகள்
உறுநோதுமல் பிணி யுரு நிலை சிறையில்
வரா திருந்ததென்? அபராதிகளே சொலும் (இ)

இதி = சாத்தான்.

51

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்.

இராகம் — காம்போதி. தாளம் — ஆதி.

மழவர் மிகுந் தேவசேனை மகிமையுடன் கூடிமண
முழவறைந்தார் திசைகளெல்லாம் முழங்கிடவே யீருலகும்
விழவயரு மென்றேயொரு விளம்பரமுஞ் செய்ததென்னே
அழகுயரும் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கல்யாணம்

பரமபதந் தனைவிட்டுப் பாரின்மிக ஏழையாகிச்
சிரமமுடன் பாரந்தாங்கிச் சிரஞ்சாய்க்க இடமின்றி
மரமதிலே மடலேறி மணமகளை மீட்டெழுந்த
அருவரனும் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கல்யாணம்.

வாத்தமரே மறுத்தபின்னர் வழிமறுகே கண்டாரெல்லாம்
பொருத்தமுடன் வந்துசேரப் போதுவழைப்பாம் சிலுவை
யின் கீழ்
அாத்தமதில் தோய்ந்த வெள்ளை அங்கியரே வருவருகர்
அருத்திமிகும் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கல்யாணம்.

காற்றுடனே மதிமுதலாம் கடும்பகைக்கு வருந்தா வாறே
தேற்றரவார் தேற்றிவாத் திருமுகமோ சுவிசேடமாய்
ஆற்றியிருந்தே திண்கற்பு மழிவரிய திருச்சபைக்கும்
ஆற்றன் மிகும் ஆட்டுக்குட்டியானவர்க்கும் கல்யாணம்.

எண்ணையொடு பந்தங்கொண்டே ஏற்றபொழு தெதிர்கொள்
ளாத
கன்னிகையோர் பாங்கியாகக் காலமெல்லாம் ஏவல் செய்யக்
கன்னன் மொழி மணவாட்டி கண்ணியமாய் வீற்றிருக்க
அண்ணலராம் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கல்யாணம்.

52

பன்னிரு சீடர்.

'வந்தேமாதா மேன்போம்' என்ற மெட்டு.

பேதுரு என்ற சீமோன்—அவன்
சோதரன் அந்திரேயா

செபதேயு மகன் யாக்கோ(பு)—அவன்
சீரிய சோதரன் யோவான்

பிலிப்பு பர்த்தொலோ மேயு—திருத்
தோமா ஆய மத்தேயு

அல்பேயு மகன் யாக்கோ(பு)—ஒரு
ததேயு வென்ற லெபேயு

கானானி யனும் சீமோன்—முகங்
காட்டிக் கொடுத்த யூதாஸ்

யூதாஸ் காரி யோத்தின்—பதில்
ஆனன் மத்தியாவே

53

பரிசுத்தாவி.

'சாந்தமுலேக' என்ற மெட்டு.

பல்லவி

ஆண்டவரோடே ஐக்கிய மாக ஆவியானவர் அருள்வார்

அனுபல்லவி

மாண்டபராதியே மாண்டெழ நீதியே (ஆ)

சரணம்

1 மூண்டெழு தீநாவால் முழங்கியே தாவி
வேண்டிய பலபாஷை விளம்பியே விரைந்தேவி (ஆ)

2 பெந்தே கோஸ்தேநாளில் பேணியப் போஸ்தலர்
சிந்தை யொன்றாய்த் தேவான சின்மயானந்தம்போல (ஆ)

3 யோவானின் ஞானஸ்நானம் யோர்தானில் நீரே
ஆவியினாலே ஸ்நானம் அடைகுவீர் இனி நீரே (ஆ)

4 பேயொடு பாருடல்கள் பிணங்கிய போரிலும்
தீய சோதனையிலும் தேற்றரவாளனாகி (ஆ)

மாண்டு=மரித்து. அபராதி=பாவி. மாண்டு=மாட்சி
மைப்பட்டு.

54

சவுல் குணப்படுதல்.

'பூங்காவிநோதமே' என்ற மெட்டு.

பல்லவி

தேஜோமயானந்தம் தேவகுமாரபந்தம்

அனுபல்லவி

தீயவினை மாயவரு (தே)

திடுக்கிடும்படி தடித்திலங்கிய (தே)

தித்தித்தகமிகு பத்திச்சுவையுறு (தே)

தெரிசன முறைவரு பரிசன மறிவரு (தே)

தெம்பும்நம்பு மடியவ ரன்பு மின்பும்பெருகிடத் (தே)

திருக்கழிந் திரு தினமுணவின்றித்
திறக்க வங்கொரு தரிசன மொன்றத் (தே)

திரு மக னெனுமொரு தினகர வொளியொடு
மொருமதி மறுபெய ரொடுவர மருவிய (தே)

சரணம்

தேசமெங்கும் புகழுங் கமாலியேல் தரிசியே
ஆசிரியனாக அவன் அடிகள் பரசியே
மாசறு கலைகள் பல மாண்ட சவுல் சசியே
ஏசுமத ஞானமதில் எல்லையில் அசுசியே—உற

எதவுஞ் செய்யாமல் வேலைவெட்டி—கிறிஸ்
தேசுவடியார்களையே கட்டிப்—பல
இன்னல் செய ஒரு சிறுபட்டி—அதற்
கென்று பின் தமஸ்கு நகரெட்டி—வர

எல்லொளியும் வீசும் இறையொடும் பேசும்
கொள்ளும் விசுவாசம் குறைவறும் நேசம் (தே)

தடித்து=மின்னல். திருக்கு=கண். சசி=சந்திரன்.

55

மெய்ம்மறை.

‘கோரினவா ழுசதுமைய’ என்ற மெட்டு.

இராமப்பிரிய — ரூபகம்.

பல்லவி

ஆரணவுரை அமுதவாரி ஆனந்த மாரி

அனுபல்லவி

சாரமான மதுரவேரி சத்யாங்க சத்ப்ரசங்கம் (ஆ)

சரணம்

காராலாகாதனுதி கம்பனூர் வாய் மலர்ந்த ஜோதி
பெருகு பத்துத்தரும நீதி பேதமுறுப் போரவிதி
பரமபத நெறியை யோதி பாருடன்பொரும் வீரவேதி
கரவாத கனகசம்பத்தாதி (ஆ)

56

'ஐயா பழனிமலை வேலா' என்ற மெட்டு.

சகானா — ஏகம்.

வங்காரமானவேத வசனம்—அதன்
வாசகம் அறுசுவை யசனம்
சிங்கார பரமதரிசனம்—அதைச்
சிந்திப்பவருக் கில்லை விசனம்

தேவாமிர்தமே தெளிதேனே—அதன்
திவ்யமதுரம் நிகர் தானே
ஜீவாதரமெனுமோர் வானே அதிற்
சிறிதுமோர் குறைவில்லை மானே (வ)

வாலிபன் வழிகளிற் சேமம்—அதை
வாசிக்க பகல் நடுச்சாமம்
காலோர வளமர நேமம்—உன்றன்
கருமங்கள் நிறைவுறுந்தாமும் (வ)

பேதைக்குப் பரம விவேகம்—பல
பிணிகளும் பெயர்ந்துடன் போகும்
பாதைக்குப் பகலொளியாகும்—இரு
பதமொரு தீபமே தெய்வீகம் (வ)

அசனம்=உணவு.

57

புதிய ஏற்பாட்டுப் பத்துக் கற்பனைகள்.

'மாங்காய்ப் பாலுண்டு' என்ற மெட்டு.

1 கர்த்தரே தெய்வமாய்க் கருதித் தொழுவார்க்கே
வித்தையு மேதுக்கடி மடந்தாய்!
(கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.)

2 ஆவியில் தேவனை ஆராதிப்பவர்க்கே
ஆலய மேதுக்கடி மடந்தாய்!
(ஆவியில் தொழுகின்றவர்க்கு ஆண்டவர் எங்குமிருக்கிறார்)

3 விண்ணவன் நாமத்தை வீணிலுரைப்பார்க்கே
மண்ணியல் ஏதுக்கடி மடந்தாய்!

(மண்ணியல்=பாவநிவாரணம். தேவன் தமது நாமத்தை வீணில் வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.)

4 ஓயாது தேவனை உருகி நினைப்பார்க்கே
ஓய்வு நாள் ஏதுக்கடி மடந்தாய்!

(இடைவிடாது தேவனை எண்ணுவார்க்கு எல்லா நாளும் ஒன்றே.)

5 பெற்றவரை யென்றும் பேணியிருப்பார்க்கே
கற்பமு மேதுக்கடி மடந்தாய்!

கற்பம்=காயகற்பம். ஆயுளை நீட்டிக்கும் சித்தர் மருந்து. "......உன் வாழ் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையுந் தாயையுங் கனம் பண்ணுவாயாக.

6 கோபங் கொள்ளாமலே குணமாயிருப்பார்க்கே
யோகங்க ளேதுக்கடி மடந்தாய்!

(மனதை யடக்குவதே யோகநிலை.)

7 கட்டப்பசியேனும் களவு செய்யாதார்க்கே
காவல ரேதுக்கடி மடந்தாய்!

காவலர்=காவற்காரர்.

8 விபசாரம் செய்யாத வித்தகருக் கல்லால்
உபசாரம் யாருக்கடி மடந்தாய்!

(விபசாரிகளை எவரும் வீட்டிற் சேரார்.)

9 சத்தியமே என்றும் சாற்றியிருப் பார்க்கே
சத்திய மேதுக்கடி மடந்தாய்!

சத்தியம்=பிரமாணம்.

10 எனையவர் பொருள் இச்சியாதவர்க்கே
கானகம் ஏதுக்கடி மடந்தாய்!

(இச்சையில்லாதவர்கள் சோதனையினின்று நீங்குமாறு காட்டுக்குச் சென்று தவம் செய்ய வேண்டியதில்லை.)

கற்பனைகள் பத்தும் கைக்கொண்டிருப்பார்க்கே
பொற்பனை ஏதுக்கடி மடந்தாய்!

பத்துக் கற்பனைகளையுங் ,கைக்கொண்டிருந்த ஒரு யூதன் ஏசுவினிடம் வந்து தன்னை நீதிமானுகக் காண்பிக்க விரும்பினுன். அப்போது ஏசு 'உன் உடமைகளை யெல்லாம் விற்று வறியோர்க்கு வழங்கு' என்று சொன்னுர்.

பனை=ஒரு பெரிய அளவு.

58

விசுவாசம்.

'என்னடி நான் பெற்ற மங்கை' என்ற மெட்டு.

ஏசுவையே விசுவாசி
நீ சுவாசி ஞானவாசி
உனக்—கின்றே துன்பமெல்லாம் வாசி
இங்கே—ஏனையர்க் கூழிய
மாகவே வாழிய
ஏசுவின் அன்பே நீ வாசி
அதற்—கேமமாக வேதம் வாசி

நல்வினையில்லா விசுவாசம்
அது நாசம் பெரு மோசம்
ஏசு—நாதனைப் பேய்களும் பேசும்
நன்றும்—நம்மாலில்லை யொன்றும்
நம்பன் அருளென்றும்
நல்லவரின் சகவாசம்
அதில்—செல்லவிடு அவகாசம்

பக்தர் செல்லும் பர மார்க்கம்
வினை தீர்க்கும் மலை பேர்க்கும்
குடும்—பத்தாரையும் மோட்சஞ் சேர்க்கும்
வழி—பாறை முள்ளின்பாலே
பட்டமுளை போலே
பாகஞ் செல்லாமலே தீர்க்கம்
ஓடு—பந்தய மாமணி யார்க்கும்

கட்டி யுடுக்கவும் உடையே
உண்ணும் மடையே பெரு முடையே
என்று—கட்டப்படாதே நீ இடையே
அந்தக்—கானத்து மல்கிய
காகத்தை லில்லியைக்
கண்டு நம்பிக் களிப்படையே
அவை—கர்த்தரின் நிச்சயக் கொடையே

துன்பம் வரிற் கலங்காதே
மலங்காதே விலங்காதே
பொன்னின்—தூயபுடமேயப்போதே
பெருந்—துன்பத்தி லின்பமும்
அன்புற்ற வன்பமும்
துங்கன் திருவடிப் போதே
அதில்—தங்குவாய் தீங்கடுக்காதே

59

திருப்தி.

'பாவஞ்செய்யாதிரு நெஞ்சே' என்ற மெட்டு.

நாதநாமக்கிரியை — ஏகம்.

பல்லவி

போதுமென்றே யிரு மனமே—அது
போன்றதில்லை லோக மூன்றினுந் தனமே

சரணம்

1 ஆசைக்கோ ஓரளவில்லை—அதன்
ஆணைவழிச் செல்ல அளவில்லாத் தொல்லை
காசைக் கையாடவே நல்லை—பிச்சைக்
காரனைக் கண்டாலுங் கடிப்பாயே பல்லை (போ)

2 கவலைப்படுவதனாலே—எவன்
காயத்திற் கூட்டுவான் ஒருமுழம் மேலே
கவனத்தோடேயிது காலே—அந்தக்
காகத்தை லில்லியைக் கண்டறி நூலே (போ)

3 ஏதும் நம்மாலே யாகாது—அந்த
இறைவன் செயலாகும் எல்லா மென்றோது
தீது வெறுப்பத் தீராது—வாராத்
திருவை வா வென்றாலுந் திரும்பிப்பாராது (போ)

4 பொன்னும் வெள்ளியும் இரும்பு—நாமே
போகும் வழியுள்ள கல்லெல்லாம் கெம்பு
திண்ணையிருந்தாலுந் தெம்பு—பர
தேசிக் கென்னகுறை தெற்றென நம்பு (போ)

5 உண்பது நாழியே திண்ணம்—என்றும்
உடுப்பது நால்முழம் உகந்ததோர் வண்ணம்
எண்பது கோடியே எண்ணம்—இங்கே
இருக்குந்துணையுமதே யிடுக்கண்ணும் (போ)

6 பேராசையாற் பெரு நஷ்டம்—அந்தப்
பெருமான் மேலுள்ள விஸ்வாசமுங் கஷ்டம்
தீராத நோய்தனக் கிஷ்டம்—அவன்
தெருவாருக்கும் மிகத் தீரும் அதிர்ஷ்டம் (போ)

60

கிறிஸ்துவுக்காட்பட வாஞ்சை.

'சரணகமலாலயத்தை' என்ற மெட்டு.

கனகமயமாயுதித்த தினகரனையே நிகர்த்து
கனமகிமையா யெடுத்த மறுரூபா
கவலையறவே விடுத்து வளரும்விசுவாச முற்று
முதலுனது ராஜியத்தின் முறைதேடி
எனதுயிரையே வெறுத்து வழிசிலுவை தோளெடுத்து
இடுகுவழி நீ தொடுத்த அடியேகி
இறுதிவரையே பொறுத்து நெடுமகுடமே கவித்துன்
இணையடி பராவி நிற்க அருள் தாராய்
பனகவழி பாவமுற்ற மரணமிகு பாதலத்து
மருவியொரு வாகை பெற்ற மனுவேலா

படைகளொடு போர்மிகுத்த கடியுலகு தேகமுற்று
முடியவொரு மாபலத்தை அருள்வாயே
மனது குவியாமல் நித்த முலவு சிறு போகநத்தி
மறுகுபவ சாகரத்தி லெனை யாளாய்
மலிகடலிலே நடக்க முயலுமொரு சீடனுற்ற
துயரை யுடனே தவிர்த்த குமரேசா

61

காலைப்பாட்டுகள்.

கானடா — ஆதி.

பல்லவி

வைகறை விழித்தெழு மனமே
வாழ்த்துவாய் கிறிஸ்துவை முனமே

அனுபல்லவி

வைகிய பறவைகள் இனமே
வைதாளி பாடுவ வணமே

சரணம்

1 சேவல் கூவுமுன் எனதிறையைச்
சீமோன் மறுத்தான் மூன்று வரையே
பாவி மறுத்தேன் பல முறையே
பகவான் பொறுத்தார் என்றன் குறையே (வை)

2 கிழக்கிலுதித்த விடி வெள்ளி
கிறிஸ்தின் பிறப்புவமை தெள்ளி
விளக்கி விரையும் மிசை தள்ளி
விடியும் வரை வயிர மெள்ளி (வை)

3 காவி நெகிழக்கவின் மறையும்
கமழும் மதுரமிகு நறையும்
தேவமகனு முவந்துறையும்
திறவாய் பவமுடனே மறையும் (வை)

கவின் = அழகு.

62

பூபாளம் — சாப்பு.

பல்லவி

காலை ஏசுவை கெஞ்சமே
கண்டடை பதகஞ்சமே

அனுபல்லவி

மாலையென் னொடு மஞ்சமே
மருவிக் காத்தவர் தஞ்சமே

சரணம்

1 நல்ல நித்திரை தந்தனர்
நாசமின்றிப் புரந்தனர்
உள்ள கத்தை யுகந்தனர்
உயிரிரத்த முஞ்சிந்தினர் (கா)

2 நாளிதிற் செயல் யாவுமே
நம்பனாருள் மேவுமே
கூளி மெய்ச்சக ஏவுமே
கொஞ்ச மும்மிலை நோவுமே (கா)

3 உறங்கிப் பின்பு விழித்ததும்
உயிர்த் தெழுந்ததை யொத்ததே
இறங்கித் தூயர் சந்தித்ததும்
எனையு மின்ப முறுத்தவே (கா)

தஞ்சம்=1 எளிது 2 சரணம் கூளி=பிசாசு மெய்=மாமிசம் சகம்=உலகம்.

63

நொறுங்குண்ட பாவியின் முறையீடு.

தோடி — நபகம்.

பல்லவி

இனியாகிலும் ஏழைக்கிரங்குவாய் ஏதுந்துணையில்லை
ஏசுக்கிறிஸ்தையா

அனுபல்லவி

தனியே துயர் தாங்குதில்லை மனம்
தத்தளித்தேன் பற்றறவே தற்பரனே அற்புதனே (இ)

சரணம்

கனியாத செங்கா யேனும் காசினி
காமுறுமே தேமாக்கதலியோ டாசினி
மனியாதே யுன் மனிதிலென் மாசினி
மதித்திடாய் மாணவே அளித்திடாய் ஆசினி (இ)

2 சேயானவர் தீயவராயினும்
சேர்த்தணைத்தே யருள் செய்குவர் தாயெனும்
மாயாவுரை மருவுமெவ்வாயினும்
மருட்பட்டே னாயினுங் கடைப்பட்டே போயினும் (இ)

3 கடலே மிகிற் கட்டவும் எதணை
காற்றுமி கின் அதைக் கழறவும் யாரிணை
அடலேறெனும் ஆண்டவ நீ துணை
அலைப்பட்ட எறும்புபோல் அலைப்புண்டேன் அரவணை (இ)

4 அசரீரிநீ ஆகையால் எப்போதும்
அல்லற்படுந்துயர் அறிவதில்லை யேதும்
நிசமாயினும் சோதனை யும் போதும்
நித்திய னேநானம்பினேன் பத்தியுடனே யுன்பாதம் (இ)

5 எவராயினும் எய்துவரேல் நோவும்
எண்ணிலவை யொன்றிரண்டாகவே மேவும்
நவமே யென்னை நண்ணின நோய் யாவும்
நட்டமுடனேனுஞ்சாகத் தற்கொலையுமாகும் பாவம் (இ)

64

உலக நிலையாமை : ஒரே துணை.

'சங்கரா சிவ சங்கரா' என்ற மெட்டு.

பல்லவி

ஏசுவே கிறிஸ் தேசுவே கிறிஸ் தேசுவே எனக்கோர் துணை
ஏழையேனையிவ் வேளையில் கரை யேற்றவும் வேறுயார்புணை

சரணம்

1 சேதற்ற கடல் சென்று தேடிய செல்வமுங் கோடியாயினும்
காதற்றவூசி தானும் பின்னொரு கடைவழிக்கு வாராதுகாண்

2 வாரணங்குழை கொண்டெறிந்திடும் வாழ்க்கையும் நிலை
நிற்குமோ
காரணம்பல கண்டறிந்துநீர் கர்த்தன் பாதத்தைப் பற்றுவீர்

3 பேதமானவறிவினா லொரு பிணத்தையே யுயிரென்
றெண்ணிக்
காதன் மாதருமைந்தருங் கடைகல்லறை மட்டே நண்ணுவர்

4 தந்தைதாய்தமர் தாரமும்பெற்ற தனயரும்மற்றும் அனையரும்
சந்தைபோலிங்கு கூடுவார்பின்பு சடுதியாகவே மறைகுவார்

5 எத்தனைபல செல்வமாயினும் இமையில்வீழ்ந்து வெறிக்குமே
கத்துமாகடல் கரைமறுத்தபின் கண்டமைந்தும் மறிக்குமோ

6 மன்னராயினும் மக்களிற் பிறரென்னராயினும் மாள்வரே
இன்னுயிர்மனை யாளொடே யிங்கும் எதிலாரடி வீழ்வரே

7 அவனிவந்தாலும் அடுவேனென்றுரை ஆகவமல்ல வாகனே
அவனையன்றியோர் அணுவையாயினும் அசைக்கவும் உன்னு
லாகுமோ

8 தன்பலத்தையே நம்பிச்செய்வது தருமமேனும் விளங்குமோ
மண்குதிரையை நம்பியாற்றினில் மானிடர் யாரிறங்குவார்

9 ஆணையவ்வனம் அழகுவல்லமை அறிவு சௌக்கியம் ஆறுமே
பேணிநம்புவர் பிணிகள் வந்திடில் பேருமே நிலை மாறுமே

10 காயமே பரு நோயுற ஒரு காசுமில்லாத லாசரு
ஆயினும் விசுவாசியின் தந்தை ஆபிராம்மடி சேரவே

11 பேயும் தேகமும் பாரும் மண்டியே பெரிய போராட்டஞ்
செய்கினும்
மாயும் வேளையில் மாயை வந்துளம் மறுகி மாருட்ட மெய்
தினும்

12 மண்ணிலாகிய மானிடன் பின்னும் மண்ணுளேகினன்
ஏதமே
நண்ணி வந்துயிர் நல்கிய ஏசுநாதனல் பிழை நீதமே

65

ஒரே மிஷன் : ஒரே திருச்சபை.

'ஜன கண மன அதி' என்ற மெட்டு.

1 உலகமுழுவது மொரே திருச்சபையே
உத்தம கிறிஸ்தவ ஞானி
கத்தோலிக் ஆணை கடங்தஜெர் மானி
லுத்தரன் மா பிரித்தானி
இந்திய தேசியம் இதரவி லாசம்
பெந்தே கோஸ்து விஸ்வாசம்
பலபல மிஷன்களுமுண்டே
பக்த ரெல்லாம் சபை யொன்றே
பகரும் கிறிஸ்தவ மென்றே
உலகமுழுவது மொரே திருச்சபையே
உத்தம கிறிஸ்தவ ஞானி
ஒரு மாமறைமே னெறியே
ஒரு பொதுத்திருச் சபையே

2 உலகமுழுவது மொரே திருச்சபையே
உடம் பதன் தலை கிறிஸ்தேசு
ஒன்ருத சபைகளாய் ஒருவின அங்கம்
உறுவது மோர் தலை யெங்ஙன்
ஊழியம் பவுல் அப்பொல்லோ ஒன்றே
ஒவ்வோர் வினை வேறுண்டே
வினையச் செய்பவர் தேவன்
வினையைச் செய்பவன் யாவன்
விதியிற் செல்வன ஜீவன்
உலக முழுவதுமொரே திருச்சபையே
ஒற்றுமை போதக வன்மை
ஒருமா மறைமே னெறியே
ஒருபொதுத் திருச்சபையே

66

1ம் சங்கீதம்.

'எத்தனை திரளேன்' என்ற மெட்டு.

தன்னியாசி — ஆதி.

பல்லவி

1 பாக்கியவான் பரன் பதமலும் பகலுமே
பரிந்து தியானஞ் செய்வான்

அனுபல்லவி

மூர்க்கரா லோசனை முகந்தவர் வழி நில்லான்
முகம்பரிகசிப்பவர் முன்னே யுட்காரச் செல்லான்

சரணம்

2 நீர்க்காலின் ஓரமாய் நிறுத்தப்பெற்றுறுகாலம்
நிதிபெறு கனிகள் தந்து
சேர்க்கையிலே யுதிராச்செழுமரம் போலிருப்பான்
செய்வதெல்லாமே வாய்க்கும் சிந்தித்தபடி வந்து

3 பாதகர் காற்றடிக்கும் பதராவர் தீர்ப்பில் நில்லார்
பாவிகள் நீதர்முன் நில்லார்
நீதிமான் வழிகளை நின்மலன் அறிந்துள்ளார்
நெடிய துன்மார்க்கர் தீய நெறிகள் நொடியும்நில்லா

67

23ம் சங்கீதம்.

'ராம பஜன கோரியாம்' என்ற மெட்டு.

பல்லவி

ஏக பரம பாக்கியம் இந்தச்சிலாக்யம்

சரணம்

1 ஏகோவா எந்தன் மேய்ப்பர் ஏதுந்தாழ்ச்சி யடையேன்
வாகான புன்னில மேய்த்து வாவிவிடுவார்

2 என்றன் ஆத்துமந்தேற்றி எனைநீதி நடத்துவார்
நன்னய மாகத் தமது நாமநிமித்தம் (ஏ)

3 நான் மரண இருளில் நடந்தாலும் பொல்லாப் பஞ்சேன்
தேவரீர் கூட இருப்பீர் தேற்றுவதுங் கோல் (ஏ)

4 பகைவர்முன் பந்திவைத்தே பாத்திரம் வழியவென்
சிகையபிஷேகம் செய்கிறீர் சிறந்த நெய்யால் (ஏ)

5 என்னுடைய நாளெல்லாம் எனக்கு நன்மை கிருபை
நின்மலன் வீட்டில் நீடியே நிலைத்திருப்பேன் (ஏ)

68

42ம் சங்கீதம்

'வனஜாட்சி' என்ற மெட்டு.

சிந்துபைரவி — ஏகம்

பல்லவி

கலங்காதே — கவலையுடனே மனம் கலங்காதே

அனுபல்லவி

கர்த்தர் சந்நிதியின்
ரட்சை யெண்ணித் துதி

சரணம்

1 தாவியே மான்களுந் தண்ணீர் அவாவ
தகை மனங் கடவுள்மேல் தனியுயிரேவ
மேவியே தேவகம் மிண்டர் வினவ
மிகவுமென் னிருகணும் பகலிரா நோவ

2 பண்டிகை ஆலயம் பலருடன் சென்றேன்
பணிவொடு துதிசெய்தேன் பழைய நாளன்றே
இன்றதை யுள்ளவும் இளகியே நின்றேன்
இறையுமை யெண்ணுவேன் எருமோனின் குன்றே

3 கரை மதகலை யென்மேல் கரை புரண்டோடும்.
கட்டளை யிடுமிறை கருணை யெற்பாடும்
இரவிலவரைப் புகழ்ந் தென்வாயும் பாடும்
எனது தேவனை யென்றன் விண்ணப்பந் தேடும்

4 கன்மலைத் தேவனைக் கழறுவேன் நானே
கடியவர் தாக்கவும் கவன்றலைந் தேனே
உன்னுடைத் தேவனெங்கே யென்பதானே
உருவக்குத்திய புண்ணே உறுவதென்பேனே.

69

95ம் சங்கீதம்.

பைரவி — ரூபகம்.

பல்லவி

ரக்ஷண்யக்கன்மலே யோரம் — கர்த்தனை
ரஞ்சகக் கெம்பீரம் பாடவாரும்

அனுபல்லவி

துதித்த லுடனவர் முன்னே
கதித்த விசையுடனின்னே

சரணம்

1 கர்த்தரே தேவன் எல்லாத் தேவர்க்கும் ராஜன்
இத்தரையாழம் அவர்கையிலே வாசம்
மெத்தவுயர்மலே கத்துங்கடற் கீசன்
வெட்டாந்தரையும் அவர் கைவினே பேசும்

நம்மையுண்டாக்கினவர் முன்
நாம் முழங்காற்படி யிடுவோம்
செம்மையின் மேய்ச்சலின் ஜனமே
சீர்பெறும் ஆடுகளுடன் நாம்.

2 இன்றிவர் சத்தம் இசைந்து கேட்பீராகில்
அன்று வனாந்தரம் சோதனை நாட்போல
உந்தன் மனங் கடினப்படுத்தாதேயும்
அங்கே உம் தந்தையர் என்னேயே சோதித்தார்

நாற்பது வருஷம் வெறுத்து
நன்னெறி வழுவின ரென்றே
ஏற்படுமெ னதிளேப்பாறல்
இலேயவர்க் கென்றது முண்டு.

கவனிப்பு:— ஏசுவின் இளமையைப்பற்றிய 9ம் கீர்த்தனைச் சரணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இதைப் படிக்கவும்.

தந்தைதா யிவருறத் தவமெனே செய்தார்,
என்றவரேனோர் ஏகமாய் மகிழ

அந்தமி லாதவன் அருளொடு ஞானமே
மன்றயவாமதி மாண வளர்ந்தனர் (இ)

70

100ம் சங்கீதம்.

'மாற்றறியாத' என்ற மெட்டு.

சுருட்டி — ரூபகம்.

1 மானிடரே கீதம் பாடிக் கெம்பீரம்
மகிழ்ச்சியாய்க் கர்த்தரை வணங்குமெல்லாரும்
ஆனந்தமாயவர் சந்நிதி வாரும்
ஆராதனை செய்தே அவருடன் சேரும்
ஞானமாய்க் கர்த்தரே தேவனென் றோரும்
நாமல்ல அவரே தான் நமைப்படைத்தாரும்
கோனவர் நாம் மந்தை மேய்ச்சன்மகாரும்
குணமாகக் கூடியே தினங்களி கூரும்

2 ஆலய வாசல் அவர்பிரகாரம்
அருந்துதி புகழ்ச்சியோ டவர் நாமங்கூறும்
சீலர் கர்த்தர் அவர் திருவருட்சீரும்
சேர்ந்த வுண்மையுமுண்டு தலைமுறை தோறும்
மூலமுதன்மைத் தேவர் மூவாமுப்பேரும்
முந்து மகிமைபெற முக்கியவாரம்
கால மெல்லாமது கண்டுள்ளவாறும்
கருதியபடி யாமென் கானத்தினீறும்.

71

121ம் சங்கீதம்.

'காலமதாயப்படுத்து' என்ற மெட்டு.

பல்லவி

உன்னத முதவும்மலை—உயரவிரு
கண்ணு மேறெடுத்தநிலை—எனக்குகந்த

அனுபல்லவி

விண்ணும் மண்ணும் படைத்த வேதன் கண்ணேயிருந்து
நண்ணும் ஒத்தாசையதை நம்பிவந்தேன் புரிந்து

சரணம்

1. காலைத்தள்ளாடவே யொட்டார்—உன்னைக்காப்பவர்
காரியக்காரர் உறங்கார்—கவனமாக
மேலைக்கதியிஸர வேலைக் காக்கிறவரெக்
காலு முறங்குவதும் கண்மூடுவதுமில்லை—

2. கர்த்தருனது காவலர்—வலதுபக்கம்
கண்ணாரும் நிழலாகுவார்—கண்ணியமாக
பட்டப்பகல் வெயிலும் பாதியிரா நிலாவும்
பாதை விளைநிலத்தும் சேதம் செய்வதுமில்லை.

3. காக்கிறார் உன்னைக்கர்த்தரே—தீங்கைவிலக்கி
ஆத்துமம் தன்னை நித்தமும்—அரவணைத்து
போக்கும் வரத்துமின்றிப் பூமிமுடிவரையோர்
போக்கும் வராதபடி காக்குங் கருணைக்கடல்

72

127ம் சங்கீதம்.

பார்சிமெட்டு—ஏகம்.

பல்லவி

கர்த்தர் கட்டா ராகில் வீட்டைக்
கட்டுவார் பிரயாசம் விருதா
கர்த்தர் நகரங் காவா ராகில்
காவலர் விழித்திருக்கை விருதா

அனுபல்லவி

காலையி லெழுந்து நீர் கருமங்கள் புரிந்தபின்
கஷ்டத்தின் பலனையுண்பதும் விருதா.

1 கர்த்தரோ தமக்கே இஷ்டமானவராம்
பக்தருக்கே சுக நித்திரை யளிப்பார்
புத்திர சுதந்தரம் கர்த்தரால் வருவது
கர்ப்பத்தின் கனியவர் தரும் பலனே

2 வாலவயதின் மகார் வல்லவன் கணைகள்
சாலவும் அவைநிறை சமரன் பாக்கியவான்
நாணமில்லாமலே ஒலிமுக வாசலிற்
பேணலருடனவர் பேசுவாரே

73

133ம் சங்கீதம்.

'சுதேசமகமதல்லி' என்றமெட்டு (முதலில் தரு அசை கூடியது)

பல்லவி

சகோதரர் ஐக்கியமாய்ச் சஞ்சாரம் செய்துவரும்
மகாநலமின்பமுடன் மகிமையான வன்மைபெறும்

தொகையரு

ஆரோன் சிரசினின்றங்கிமேல்வடியும் அபிஷேக
வாசனைத்தைலம்

சீராக முடிமிசை தங்கிவார் பனியும் சீயோன்
எர்மோனின் சைலம்

பல்லவியெடுப்பு

கர்த்தரோ ஆவலாகக் கட்டளையிடுகின்றாரே
நித்தியஜீவனுடன் நெடிய ஆசீர்வாதம் பாரே

74

148ம் சங்கீதம்.

'சூழ்ந்துசர்க்கா' என்ற மெட்டு

1 வானமீதே வாழ்பவைகாள் வணங்குங் கர்த்தரையே
சேனையோடே தூதரெல்லாம் சேவியும் அல்லேலூயா

2 மீனங்களே சூரியரே மினிருஞ் சந்திரரே
வானங்களே விண்ணீர்களே வணங்குங்கள் அல்லேலூயா

3 கர்த்தரின் நாமத்தையென்றும் துதிக்கவுங்களை
கட்டளையினால் அவர் முன் படைத்தனர் அல்லேலூயா

4 நித்திய காலமுங்களை நிறுத்தி யுங்கட்கே
நிலைத்த மாறாப்ரமாணத்தை நியமித்தார் அல்லேலூயா

5 பூமியுள்ள மாந்தர்களே போற்றுங்கர்த்தரையே
நாமமுள்ள ஆழங்களே நாமிகுந்தீ கன்மழையே

6 உறைந்த மழையே மூடுபனீ அவர் உரைத்தபடி செய்யும்
விரைந்த காற்றே மலைமேடுகளே விளைந்த கனிமரம்
கேதுருவே

7 காட்டிலுள்ள விலங்கே சகல நாட்டுவிலங்குகளே
ஏற்றமில்லா ஊரும் பிராணி இறக்கையுள்ள பறவைகளே

8 'மாநிலத்திலுள்ள சர்வமாந்தர் வேந்தர்களே
மானமிக்க பிரபுக்களே மாட்சி நீதிபதிகளுமே

9 வாலிபரே கன்னிகளே வயதுமுதிர்ந்தவரே
பாலர்களே கர்த்தரையே பரவுங்கள் அல்லேலூயா

10 கர்த்தரின் உயர்நாமத்தைத் துதிக்கக் கடவீர்
இத்தரைக்கும் வானத்திற்கும் ஏற்றமுள்ள தவர்மகிமை

11 தொண்டர் இஸ்ரவேலரான தொடர்ந்த ஜனங்களெல்லாம்
கொண்டாட வுயர்த்தினரோர் கொம்பையே
அல்லேலூயா

75

மங்களம்

'நீநாமருபமுலது' என்ற மெட்டு.

சௌராஷ்டிரம்—ஆதி

பல்லவி

தேவாதி தேவ குமர திவ்ய மறி மங்களம்

சரணம்

மூவாத்ரியேக முற்ற முதலீறு மங்களமுற

வாழிக்கலித்துறை

வானமது வளம்பொழிய வரம்புயர்ந்து ஞாலம் வாழி
தான மொடு தருமங்கள் தவவிரதந் தழைத்து வாழி
கானமிகு தமிழுடனற் கலையறிவு குலவி வாழி
மானபரன் கிறிஸ்தேசு மதநீடு வாழி வாழி

பாரதி பிரஸ், மன்னார்குடி.

கவனிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளவும்.

1. நூலாசிரியன் (முதற்பக்கம் பார்க்க)
2. Mr. அன்பநாத பிள்ளை,
   3ம் தெரு, மன்னார்குடி.

இப்புத்தகத்தின் 2ம் பாகம் என் இசையாசிரியர் மன்னார்குடி வீணை வித்வான் இராஜகோபாலய்யர் அவர்கள் புதுவன் அமைத்த இனிய உயர்தர மெட்டுக்களைப் பெரும்பாற் கொண்டு, இன்னும் ஓராண்டகத்துள் வெளிவரும்.

ஞா. தே. பா.